விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 கார்த்திகை 18 சனிக்கிழமை (04.12.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 350

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO



நாடு திரும்பிய ஜனாதிபதியை ஆரத்தழுவி வரவேற்கும் அமைச்சர்கள்...

## போர்க்குற்ற விசாரணைகளை முன்னெடுக்க பிரி. வலியுறுத்தல்

### ஜனாதிபதியின் விஜயத்தின் பின் அறிவிப்பு

(லண்டன்)

வன்னியில் கடந்த வருடம் இடம்பெற்ற இறுதிக் கட்ட போரின் போது நடைபெற்றதாக கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களை சுதந்திரமாக விசாரணை செய்யும் வகையில் இலங்கை அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என பிரித்தானியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தக் குற்றச் செயல் குறித்த நிலைப்பாட்டில் மாற்றமில்லை

### அமெரிக்க அரசு அறிவிப்பு

(வாஷிங்டன்)

மனித உரிமை மீறல் யுத்தக்குற்றச் செயல்கள் தொடர்பிலான தமது நிலைப்பாட்டில் மாற்றமில்லை என அமெரிக்கா அறிவித்துள்ளது. இலங்கை தொடர்பில் அமெரிக்கா வெளியிட்ட ஆவணங்களை விக்கிலீக்ஸ் இணையம் சட்ட விரோதமான முறையில் வெளியிட்டதாகவும் இதனை வன்மையாகக் கண்டிப்பதாகவும் அமெரிக்கா சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் இடம்பெற்றதாகக் குறிப்பிடப்படும் குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிப்பது தொடர்பிலான நிலைப்பாட்டில் மாற்றமில்லை என அமெரிக்கா அறிவித்துள்ளது.

அமெரிக்காவுக்கான இலங்கை தூதரகத்திற்கும் அமெரிக்க ராஜாங்க திணைக்களத்திற்கும் இடையிலான தகவல் பரிமாற்றம் குறித்து அண்மையில் விக்கிலீஸ் இணையம் வெளியிட்டிருந்த தகவல்கள் தொடர்பில் அமெரிக்கா இதனைத் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சர்வதேச மனித உரிமை மற்றும் மனிதாபிமான சட்டங்களை மீறிய தனிப்பட்ட நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அமெரிக்கா தொடர்ச்சியாக வலியுறுத்திவருகிறது. வேறு நாடுகளுடன் அமெரிக்கா கொண்டுள்ள உறவுகளை பலவீனப்படுத்தும் நோக்கில் விக்கிலீக்ஸ் இவ்வாறான (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதிக்கு எதிராக நேற்று லண்டனில் வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

போர்க் குற்றச்சாட்டு அடிப்படையில் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான சிலருக்கு எதிராக லண்டன் வெஸ்ட் மினிஸ்ரர் நீதிமன்றத்தில் நேற்று நண்பகல்பிடியாணை வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

பிரித்தானிய தமிழர் பேரவையின் ஏற்பாட்டில் உலகத் தமிழர் பேரவையின் அனுசரணையுடன் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் சார்பில் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ் வழக்கை தமிழ் மக்கள் சார்பாக உலகத் தமிழர் பேரவையின் தலைவர் வணக்கத்துக்குரிய எஸ். ஜே.இம்மானுவேல் அடிகளார் மற்றும் பிரித்தானிய தமிழர் பேரவையின் சார்பாக முன்னாள் நாடாளுமன்ற (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்த நாடு திரும்பினார்

(கொழும்பு)

மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு பிரித்தானியா சென்றிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று பிற்பகல் 3.15 அளவில் நாடு திரும்பினார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த ஜனாதிபதியை வரவேற்பதற்காக அமைச்சர்களும், பெருமளவான மக்களும் அங்கு திரண்டிருந்தனர்.

ஒக்ஸ்போர்ட் ஒன்றியத்தில் உரையாற்றும் முகமாக லண்டனுக்கு சென்றிருந்த அவருக்கு புலம்பெயர்ந்த தமிழர்களின் ஆர்ப்பாட்டத்தின் காரணமாக அங்கு உரையாற்றும் சந்தர்ப் (20ஆம் பக்கம் பார்க்க)

## சிப்பாய் சுட்டதில் இளைஞன் பலி

(மிருசுவில்)

மீசாலை புத்தூர் சந்தியில் நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் இளைஞர் ஒருவர் இராணுவச் சிப்பாய் ஒருவரினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக தெரியவருவதாவது, கொடிகாமத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணிகளுடன் வந்து கொண்டிருந்த தனியார் சிற்றூர்தியொன்றை புத்தூர் சந்தியில் வழிமறித்த இளைஞன் ஒருவர் தான் வைத்திருந்த இரும்புக் கம்பியால் அவ் வாகனத்தைத் தாக்கியுள்ளார்.

இதனையடுத்து அப்பகுதியில் கடமையில் இருந்த (20ஆம் பக்கம் பார்க்க)

## கேரளாவில் மீள இணையும் புலிகளின் உறுப்பினர்கள்

### இந்திய ஊடகங்களில் செய்தி

(சென்னை)

இந்தியாவின் கேரளா மாநிலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் மீள் இணைந்து வருவதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இது தொடர்பிலான ஆவணப் படம் ஒன்று கேரளாவின் திருவனந்தபுரம் மண்டபத்தில் ஒளிபரப்புச் செய்யப்பட்டதாக ஐ.பி.எம் லைப் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் கடந்த வருடம் இடம்பெற்ற போரின் போது இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் தயாரிக்கப்பட்ட முல்லைத்தீவு சாகா என்ற பெயரிலான திரைப்படமே மண்டபத்தில் ஒளிபரப்பு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் விடுதலைப் புலிகள் அங்கு மீளிணையலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டதை தொடர்ந்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

மிகவும் இரகசியமான முறையில் நடத்தப்பட்ட விடுதலைப்புலிகளின் சிரேஷ்ட தலைவர்களின் (20ஆம் பக்கம் பார்க்க)

## பிரி. தூதரகத்துக்கு முன்னால் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

பிரித்தானிய தூதரகத்துக்கு முன்பாக நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது. வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறை அமைச்சர் விமல் வீரவன்ச தலைமையிலான குழு இவ் ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒக்ஸ்போர்ட் ஒன்றியத்தில் உரையாற்றுவதற்காக லண்டனுக்கு விஜயம் செய்திருந்த போது ஒரு நாட்டின் ஜனாதிபதி (20ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கு கடனுதவி

(கொழும்பு)

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட வடபகுதியில் நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாடுகளுக்காக இலங்கை அரசாங்கத்துக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 90 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக வழங்கியது.

அரசாங்கத்தினால் வட பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறப்படுகின்ற அபிவிருத்தித் திட்டத்தின் கீழேயே இக்கடன் வழங்கப்படுவதாக ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பள உயர்வை வலியுறுத்தி ஐ.தே.க கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்புக் கோரி ஐக்கிய தேசியக் கட்சி கொழும்பு புகையிரத நிலையத்திற்கு முன்னால் நேற்று வெள்ளிக் கிழமை ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்துள்ளது.

ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அரச ஊழியர்களுக்கு 2 ஆயிரத்து 500 ரூபாயால் சம்பளம் அதிகரிக்கப்படுவதாக கூறியபோதிலும் சம்பளம் அதிகரிக்கப்படவில்லை. இராணுவ வீரர்களுக்கு 600 ரூபாய் சம்பள அதிகரிப்பு வழங்கப்படுகிறது ஆனால் கருணா, பிள்ளையான் போன்றவர்களுக்கு இலட்சக் கணக்கில் சம்பளம் வழங்கப்படுகிறது. சம்பளத்தை அதிகரிக்காது அத்தியாவசிய உணவுப் பெருட்களின் விலையை அரசாங்கம் அதிகரித்துள்ளது . இதனால் நாங்கள் துன்பப்படுகின்றோம். தேங்காய் 50 ரூபாய், பாண் 50 ரூபாய், மின்கட்டணம் 8 வீதத்தால் அதிகரித்துள்ளது போன்ற கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில்,

சகல ஊழியர்களுக்கும் 10 ஆயிரம் ரூபா சம்பளம் அதிகரிக்க வேண்டும். ஆனால் இம்முறை வரவுசெலவுத் திட்டத்தில் சம்பள அதிகரிப்பு முன்வைக்கப்படவில்லை. கட்சி பேதமின்றி நாம் எல்லோரும் ஒருமித்து சம்பளத்தை அதிகரிக்குமாறு அரசாங்கத்திடம் கோர வேண்டும்.

யுத்தம் நிறைவடைந்து 2 வருடங்களாகின்றன. ஆனால் யுத்த வெற்றிக்காக பாடுபடும் இராணுவ வீரர்களுக்கு 600 ரூபாய் சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டது. இதில் 12 தேங்காய்கள் மாத்திரமே வாங்க முடியும். கருணாவிற்கு 100,000 ரூபாய் சம்பளம் வழங்கப்படுகின்றது. இந்நிலையில் வேலைத் தளங்களில் நாங்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தவுள்ளதுடன் எதிர்வரும் ஜனவரி மாதம் 26 ஆம் திகதி பாரிய ஆர்ப்பாட்ட மொன்றை நடத்தவுள்ளோம் என்றார்.

ஐ.தே. கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஐ.தே.க.பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, ஐ.தே.க.நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் மைக்கல் பெரேரா, காமனி ஜயவிக்கிரம பெரேரா, அகில வீராஜ் காரியவம்ச, ஐ.தே.க.வின் மேல்மாகாண சபை உறுப்பினர் ஏ.ஜே.எம்.முஸாம்மில் ஆகியோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். (ச-5)

# மதுபான நிலையங்களுக்குப் பதிலாக எரிபொருள் நிலையம் அமையுங்கள்

## கூட்டமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் புதிதாக அமைக்கப்படும் மதுபான நிலை யங்களுக்குப் பதிலாக எரிபொருள் நிரப்புநிலையங்களை அமைத்துத் தருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

வரவு செலவுத் திட்டத்தின் மீதான நான்காம் நாள் விவாதம் நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற போது உரை நிகழ்த்திய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் இக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

மீள் குடியேற்றப்பட்ட பகுதிகளில் அதிகமானவை இருளில் காணப்படுகின்றன. மின்வலு அமைச்சினூடாக அப்பகுதிகளுக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மின்சார வசதி இல்லாத காரணத்தால் பாடசாலைகளுக்கு கணனி வசதி வழங்க முடியாத நிலை காணப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

## தங்கப்பந்து தரிசனம்

ஸ்ரீஸ்ரீ அம்மா பகவானின் அருள் நிரம்பிய தங்கப்பந்து தரிசனம் யாழ்.கஸ்தூரியார் வீதியிலுள்ள எடிசன் அக்கடமியில் நாளை பிற்பகல் 2 மணி தொடக்கம் 5 மணிவரை நடைபெறும் (ச-3)

# கிளிநொச்சியில் பொலிஸ் நிலையம் பிரதமரால் நேற்று திறந்து வைப்பு

(கிளிநொச்சி)

கொட்டும் மழையிலும் பொலிஸ் மற்றும் இராணுவத்தினரின் உச்சக் கட்ட பாதுகாப்புடன் 20 வருடங்களின் பின்னர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தை நேற்று பிரதமர் டி.எம். ஜயரட்ன திறந்து வைத்தார்.

கடந்த 90 காலப்பகுதிகளில் கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து இலங்கை பொலிஸார் நாட்டின் அசாதாரண சூழ்நிலைகளினால் வெளியேறியிருந்தனர். இந்நிலையில் 20 வருடங்களின் பின்னர் முன்னர் இருந்த இடத்திலேயே குறித்த பொலிஸ் நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வு நேற்று வெள்ளிக் கிழமை நடைபெற்றது. இதன்போது பிரதமர் டி.எம். ஜயரட்ன கருத்துத் தெரிவிக்கையில், பொலிஸ் சேவை என்பது மக்களுக்காக உருவாக்கப்பட்ட தொன்றாகும்.

தமிழர்களும் சிங்களவர்களும் இந்த நாட்டில் அடித்துக் கொள்ள வேண்டிய தேவை ஒருபோதும் கிடையாது. என்னுடைய முகமும் உங்களுடைய முகமும் ஒரே மாதிரியாக இருக்கிறது.

இலங்கையர்கள் தமக்கென்று பல நூற்றுக்கணக்கான ஆண்டுகள் தொன்மைவாய்ந்த வரலாற்று வ... வியலைக் கொண்டவர்கள். இந்த உண்மையை நாங்கள் விளங்கிக் கொள்ளவேண்டும் என்றார்.

இந் நிகழ்வில் பொலிஸ்மா அதிபர் மகிந்த பாலசூரிய மற்றும் தேயிலைக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் பண்டார, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், வடமாகாண செயலாளர் ஆ.சிவசுவாமி ஆகியோரும் கலந்து கொண்டனர். (ச-5)


## வேலைவாய்ப்பு

கனடாவைத் தலைமையகமாகக் கொண்டு 120 நாடுகளில் இயங்கி வரும் யாழ். கிளை நிறுவனத்திற்கு சந்தைப்படுத்தல் மற்றும் வணிக முகாமைத்துவ பயிற்சியாளர்கள் தேவை. பயிற்சியின்போது ஊக்குவிப்புக் கொடுப்பனவும் பின் இலவச மருத்துவக் காப்புறுதி, ETF, EPF, அடிப்படைச் சம்பளத்துடன் நிரந்தர வேலை வாய்ப்பு. O/L, A/L தகைமையுடைய வன்னி,யாழ் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
T.P - 021 4900001 (3170)

## தவறிவிட்டது

வெற்றிவேலு யோகநாதன் என்பவரது தேசிய அடையாள அட்டை (620741990V), சாரதி அனுமதிப் பத்திரம், விசேட அடையாள அட்டை, உத்தியோக அடையாள அட்டை மற்றும் ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் நவாலி முருக மூர்த்தி கோவிலுக்கும் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். தொடர்புக்கு :
முருகமூர்த்தி கோவில் வீதி,
நவாலி கிழக்கு, மானிப்பாய்.
T.P - 0779213706 (3173)

## காணி விற்பனைக்கு

மீசாலை வடக்கு, சியாமளா மில் ஒழுங்கையில் (A-9 வீதியிலிருந்து 200 மீற்றர் தூரத்தில்) வீடு கட்டுவதற்கு உகந்த 4 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. (15 தென்னை மரங்கள் உள்ளது)
தொடர்பு : 021 321 6561
சனி,ஞாயிறு முழு நேரம்
கிழமை நாட்களில்
பி.ப - 6.00 க்கு பின் (3172)




Registered Pharmacist Available
தொடர்பு :-
K.SEEVARATNAM
No. 57/16, Register
சம்பந்தர் ஒழுங்கை,
சுதுமலை தெற்கு. (3163)


# ஊரியான் கிராம மக்களுக்கு டெனிஸ் அகதிகள் பேரவை உறுதி

கிளிநொச்சி ஊரியான் கிராம மக்களுக்கு டெனிஸ் அகதிகள் பேரவை நிறுவனத்தினால் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான பொருட்கள் நேற்று வழங்கப்பட்டன.

டெனிஸ் அகதிகள் பேரவையினால் ஊரியான் கிராம மக்களுக்கு கோழி வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு, தோட்டச்செய்கை, நெற்செய்கை மற்றும் தையல் போன்றவற்றுக்கான தொழில் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

இதன் முதற் கட்டமாக நேற்... தோட்டச் செய்கையாளர்களுக்கு 38 நீர் இறைக்கும் இயந்திரங்களும் 38 மருந்து தெளிக்கும் கருவிகளும் வழங்கப்பட்டன. அதேபோன்று 33 நெற்செய்கையாளர்களுக்கு மருந்து தெளிகருவிகள் வழங்கப்பட்டன.

இதேபோன்று கோழிவளர்ப்பு, சுயதொழில் போன்றவற்றுக்கான பயிற்சி வகுப்புக்கள் வழங்கப்படுகின்றன. (எ)


## நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய இடைக்கால பரிபாலனசபையை அமைப்பதற்கான பொதுக்கூட்ட அறிவித்தல்

பூர்வீக நாகதம்பிரான் ஆலயத்தின் யாப்பிற்கமைய தற்போதைய சூழ்நிலையில் மகாசபையினைக் கூட்டமுடியாதநிலையுள்ளது. எனினும் ஆலயத்தின் புனரமைப்பு வேலைகளை முன்னெடுக்க வேண்டிய தேவைப்பாட்டை கருத்திற் கொண்டு பொருத்தமான ஒரு சபையை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பரம்பரை நம்பிக்கைப் பொறுப்பாளரும் நிரந்தர தலைவருமாகிய திரு.மு.சிதம்பரப்பிள்ளை கோரியுள்ளார்.

தற்கால சூழ்நிலையில் மகாசபையினைக் கூட்டமுடியாத நிலையுள்ளதால் ஆலயத்தின் புனரமைப்பு வேலைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டிய தேவைப்பாடு உள்ளதனைக் கருத்திற்கொண்டு எதிர்வரும் 20.12.2010 (திங்கள் கிழமை) காலை 9.30 மணிக்கு ஆலயத்தின் இடைக்கால பரிபாலன சபையை அமைப்பதற்கான பொதுக் கூட்டம் ஒன்று எனது தலைமையில் நடைபெறவுள்ள தென்பதை அறியத்தருகின்றேன். எனவே ஆலயத்தின் வழிபடுவோர்கள், வருடாவருடம் பூசை உரித்துடையவர்கள், ஆலய உற்சவத்தின் பங்காளிகள், ஆலயத்துடன் தொடர்புடையவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொண்டு ஆலய வளர்ச்சிக்கு செயலாற்றக் கூடிய சிறந்த நிர்வாகத்தை தெரிவு செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மேற்படி ஆலயத்திற்கு சொந்தமான ஆவணங்கள் ஏதாவது இருப்பின் இருப்பவர்கள் 13.12.2010 முன் அது தொடர்பாக அறியத்தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

ஆலயத்திற்குச் சொந்தமான ஆதனங்கள், ஆவணங்கள் பற்றி தெரிவிக்க விரும்புபவர்கள் தமது தகவலை 13.12.2010 க்குமுன் எழுத்துமூலமாக அறியத்தரவும்.

ந.திருலிங்கநாதன்.
உதவி அரசாங்க அதிபர்,
வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி.

04.12.2010

(சி-1728)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தின் பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் அவர்களின் பாசமிகு மாமியார்

கந்தையா மங்கையற்கரசி



அவர்களின் மரணச் செய்திகேட்டு அதிர்வுற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆறுதலைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி !!!

யாழ்ப்பாணம் பிரதேச செயலக
கிராமிய மாதர் அபிவிருத்திச் சங்கங்களின்
சமாசத்தினரும் சங்கத்தினரும் (3174)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## சண்டையை நிறுத்தும் மருந்து

ஒரு கணவன்-மனைவி இருந்தார்கள். எப்பொழுது பார்த்தாலும் அவர்களிருவருக்கும் இடையில் சண்டை வந்து கொண்டேயிருந்தது.

கணவன் ஒருவார்த்தை சொன்னால் மனைவியிடமிருந்து இரண்டு வார்த்தைகள் பதிலாக வரும். அதன்பின் கணவனிட மிருந்து நாலு வார்த்தை பதிலாக வரும். இப்படி வார்த்தைகள் பெருகிப் போய் கடைசியில் வம்பில் வந்து முடிந்து விடும்.

அந்த அம்மா பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார். அவரால் தாக்குப் பிடிக்க முடியவில்லை.

பக்கத்து வீட்டிலும் கணவன்-மனைவி இருந்தார்கள். அவர்களுக்குள் சண்டை வருவதில்லை.

அதெப்படி அவர்களால் மட்டும் சண்டை போடாமல் இருக்க முடிகிறது? என்று இந்த அம்மாவுக்கு ஆச்சரியம்!

ஒருநாள் நேராக பக்கத்துவீட்டு அம்மாவிடமே போய் , "? ஏனம்மா... நீங்கள் எப்படி கணவனும் மனைவியும் சண்டை போட்டுக் கொள்ளாமல் இருக்கிறீர்கள்? " என்று கேட்டார்.

அதற்கென்று ஒரு மருந்து இருக்கிறது. அதை உட்கொண்டால் சண்டை வராது "என்றார் அந்த அம்மா.

"சரி, அந்த மருந்தை அவர் உட்கொள்ள மாட்டேன் என்று சொல்லி விட்டால் என்ன செய்வது? "என்று கேட்டார் இவர்.

"அந்த மருந்து அவருக்கு இல்லையம்மா... உனக்குத்தான் " என்றார் அவர்.

"அப்படியா? அப்படியானால் மிகவும் நல்லது. அதை எப்படி உட்கொள்வது என்ற விபரத்தைச் சொல்லுங்கள். எங்கே அது கிடைக்கும் என்பதையும் சொல்லுங்கள் " என்று கேட்டார் இவர்.

"வேறெங்கும் போய் வாங்க வேண்டாம். என்னிடமே இருக்கிறது அந்த மருந்து. அதில் கொஞ்சம் தருகிறேன். வாங்கி வைத்துக் கொள். உன் வீட்டுக்காரர் உன்னிடம் சண்டையை ஆரம்பிக்கும் போது நீ இந்த மருந்தை ஒரு அவுன்ஸ் உள்ளெடுக்க வேண்டும். அதை உடனே குடித்து விடக்கூடாது. ஐந்து நிமிடமாவது வாயில் வைத்திருக்க வேண்டும். அதன்பின் குடித்து விடலாம் "என்று சொல்லி ஒரு போத்தல் மருந்தை அந்த அம்மாவிடம் கொடுத்து அனுப்பினார். மருந்தை எடுத்துக் கொண்டு இந்த அம்மா வீட்டுக்கு வந்தார். வீடு பூட்டியிருந்ததால் கணவன் வந்து வாசலிலேயே காத்துக் கொண்டிருந்தார். மனைவியைக் கண்டதும் சண்டை போட ஆரம்பித்தார்.

"வீட்டைப் பூட்டி விட்டு எங்கே போனாய்? எவ்வளவு நேரமாக ஒரு மனுஷன் வாசலிலேயே காத்துக் கொண்டிருப்பது? " என்று ஆரம்பித்தார்.மனைவி இதற்குப் பதில் சொல்லவில்லை. வீட்டைத் திறந்தார். சமையலறைக்குள் போனார். ஒரு அவுன்ஸ் மருந்தை வாயில் ஊற்றிக் கொண்டார்.

அன்று சண்டை மேற்கொண்டு வளரவில்லை. நின்று விட்டது. மருந்து பரவாயில்லை. அதன்பின் பல சந்தர்ப்பங்களில் சண்டை வரும் போதெல்லாம் இந்த மருந்து அதை நிறுத்தியிருக்கிறது.

"பிரமாதமான மருந்து இது. இதைக் கொஞ்சம் அதிகமாகவே வாங்கி வீட்டில் வைத்திருக்க வேண்டியது தான் "என்று முடிவு செய்து கொண்டு இந்த அம்மா மறுபடியும் பக்கத்துவீட்டு அம்மாவிடம் போனார்.

"எவ்வளவு விலையானாலும் சரி... நான் காசு கொடுத்து வாங்கி வைத்துக் கொள்கிறேன். எந்தக் கடையில் இது இருக்கிறது சொல்லுங்க "என்று கேட்டார்.

"இந்த மருந்துக்கு விலையே கிடையாது. இலவசமாகவே கிடைக்கும் "என்றார் அவர்.

"அதெப்படி விலையில்லாமல் இதை விற்க முடிகிறது "என்று கேட்டார் இவர்.

"அது மருந்தாக இருந்தால் தானே விற்க முடியும். இது வெறும் தண்ணீர் தானே "என்றார் அவர்.

"வெறும் தண்ணீரா சண்டையை நிறுத்துகிறது?"என்றார் இவர்.

அது சண்டையை நிறுத்தவில்லை. உன்னுடைய மௌனம் தான் சண்டையை நிறுத்துகிறது. நீ வாயில் தண்ணீரை வைத்திருப்பதால் எதிர்த்துப் பேசுவதில்லை. அதனால் உன் கணவரின் கோபம் சாந்தமாகி விடுகிறது "என்றார் அவர்.

இந்தக் கதையிலிருந்து சண்டையை நிறுத்தும் மருந்து எதுவென்று தெரிந்து கொண்டீர்களா? இதை நானும் தெரிந்து கொண்டு போத்தல்களில் தண்ணீரை ஊற்றி வைத்துக் கொண்டு என்னிடம் வருபவர்களுக்கு சிபாரிசு பண்ணலாம் என்று நினைத் துக் கொண்டு உட்கார்ந்திருந்தேன். ஒரு அம்மா வந்தார்.

"எனக்கும் என் வீட்டுக்காரருக்கும் அடிக்கடி சண்டை வருகிறது "என்றார்.

"கவலைப்படாதேயம்மா. நான் ஒரு மருந்து தருகிறேன் "என்று சொல்லி ஒரு போத்தலை எடுத்துக் கொடுத்தேன். போத்தலில் இருப்பது என்னவென்பதை சொல்லிவிட்டால் அதன் மீது ஒரு மரியாதை வராதல்லவா. அதனால் சொல்லவில்லை. அந்த அம்மா வாங்கிக் கொண்டு போனார். நான்கு நாட்கள் கழித்து திரும்பி வந்தார்.

"என்னம்மா.. வீட்டில் சண்டை நின்று விட்டதா?"என்று கேட்டேன்.

"அங்கே நின்று விட்டது. இப்பொழுது உங்களிடம் ஆரம்பம் " என்றார்.

"என்னம்மா இப்படிச் சொல்றீங்க? "என்றேன்.

"பின்னே என்னங்க... நீங்கள் என்ன மருந்து கொடுத்தீர்கள்?" என்றார் கோபமாக.

"அதுவெறும் தண்ணீர்தானே "என்றேன்.

"தண்ணீரா இது... நல்லாப் பாருங்க "என்று அந்தப் போத்தலை நீட்டினார்கள். வாங்கிப் பார்த்தேன்.

அதன்பின் தான் விடயம் புரிந்தது! நான் கைதவறுதலாக எங்கள் வீட்டில் இருந்த மண்ணெண்ணெய் போத்தலை எடுத்து அவர்களிடம் கொடுத்திருக்கிறேன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# அடைமழையினால் பூநகரியிலுள்ள நெல்வயல்கள் வெள்ளத்தில் மூழ்கின

## விவசாயிகள் பெரும் கவலை

கடந்த பல நாட்களாக தொடர்ந்து பெய்து வரும் அடைமழையினாலும் கடந்த இரவு விடாது பெய்த மழையினாலும் பூநகரிப் பிரதேசத்தில் உள்ள சகல விவசாய நெற்செய்கை நிலங்களும் வெள்ளக் காடாக காட்சியளிப்பதோடு பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நெல் வயல்கள் நீரில் மூழ்கி இருப்பதனால் குருத்துக்கக்கி அழியும் நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் பெரும் கவலை தெரிவித்தனர்.

தொடர்ந்து பெய்துவரும் மழையினால் உரிய காலத்திற்கு பசளை போடவோ புல்மருந்து அடிக்கவோ முடியாது உள்ளதால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. உலக உணவுத்திட் டத்தின் கீழ் பல மில்லியன் ரூபா செலவில் 10 இற்கு மேற்பட்ட குளங்கள் ஆழமாக்கப் பட்டும் கட்டுகள் புதிதாகஅமைக்கப்பட்டும் உள்ள நிலையில் குளங்களில் நீர் மேவி தடுப்பதற்கான சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படாததால் குளத்தில் உள்ள நீர் வெளியேறிக் கொண்டிருப்பது பாதிப்பை ஏற்படுத்தும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

(ஸ்ரீ-3-84)

## பரீட்சை அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம்

இம்மாதம் 13 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள க.பொ.த (சா/த) பரீட்சைக்கு தென்மராட்சி வலயம், தீவக வலயம், யாழ் கல்வி வலயத்தில் கோப்பாய் கோட்டம் தவிர்ந்த யாழ்ப்பாணக் கோட்டம், நல்லூர் கோட்டம் ஆகியவற்றிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பரீட்சை சம்பந்தமான அறிவுறுத்தல் கூட்டம் யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் எதிர்வரும் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் தவறாது பங்கு பற்றுமாறு குறித்த அலுவலர்களை யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

(ஸ்ரீ)

# மதகு உடைக்கப்பட்டு இருமாத காலமாகியும் திருத்தப்படவில்லை

## போக்குவரத்தை மேற்கொள்வதில் பெரும் சிரமம்

சண்டிலிப்பாய் சந்திக்கு அருகில் உள்ள மதகு திருத்த வேலைக்காக உடைக்கப்பட்ட போதும் இரண்டு மாதகாலம் வரை திருத்தப்படாது இருப்பதால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

சண்டிலிப்பாய் செல்லும் வீதியில் உள்ள மதகு ஒன்று இரண்டு மாதங்களிற்கு முன்னர் திருத்த வேலைக்காக உடைக்கப்பட்டது. இம் மதகு உடைக்கப்பட்டமையால் 788, 787, 782, 749 இலக்கமுடைய இ.போ.ச. மற்றும் (மினி பஸ்) பேரூந்துகள் டச்சு வீதியூடாக செல்கின்றன. ஆனால் இவ்வீதி மிகச் சிறியதும் பாவனைக்கு உத வாத வகையிலும் உள்ளது. மழை காலத்தில் பிரதான பாதையில் இருந்த மதகினை உடைத்தது மட்டுமின்றி அதனை திருத்தவேலை செய்யாது விட்டிருப்பதானது மக்களின் போக்கு வரத்தினைமேலும் சிரமத்துக்குள்ளாக்கியுள்ளது. எனவே சம்மந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நட வடிக்கை எடுத்து இந்த மதகு வேலையி னைப் பூர்த்தி செய்து உதவுமாறு மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

(ஸ்ரீ-4)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | -- | 100 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 100 | 140 | 100 |
| தக்காளி | 100 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 |
| கோவா | 40 | 60 | 60 |
| கரட் | 40 | 70 | 70 |
| பூசணி | 50 | 50 | 50 |
| புடோல் | 50 | 70 | 40 |
| வாழைக்காய் | 40 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 130 | 150 | 150 |
| பெரிய வெங்காயம் | 130 | 160 | 140 |
| பாகற்காய் | 140 | 140 | 140 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 40 |
| கருணைக் கிழங்கு | 40 | 70 | 40 |
| பயற்றங்காய் | 140 | 140 | 150 |
| லீக்ஸ் | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 70 | 80 | 70 |
| கறிமிளகாய் | 160 | 150 | 150 |
| முருங்கைக்காய் | 250 | -- | 260 |
| போஞ்சி | 100 | 100 | 90 |
| கத்தரிதம்புள்ள | 100 | 110 | 60 |
| கீரை - 1 பிடி | 20 | 25 | 30 |
| தேசிக்காய் | 100 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50-60 | 50 |

# நாளை மின்வெட்டு அமுலாகும் இடங்கள்

உயரழுத்த மின்மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் நடைபெறவுள்ளதால் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை8மணியிலிருந்துமாலை 5 மணிவரை புன்னாலைக்கட்டுவன்,அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சி பிரதேசம் ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.(ஸ்ரீ-2)

# இராசி பலன்

*04.12.2010*
*(கார்த்திகை 18, சனிக்கிழமை)*
*சதுர்த்தசி பின்னிரவு 12.49மணிவரை*
*விசாகம் முன்னிரவு 7.37 மணிவரை*
*இராகுகாலம் 9.15-10.45 மணிவரை*
*சுபநேரம் 3.15-4.45 மணிவரை*

**மேடம்** கவலைகள் தீர கடவுளை வழிபட வேண்டிய நாள், வேலைப்பளு கூடும் , உடல் நலனில் கூடிய கவனம் தேவை, விரயங்கள் அதிகரிக்கும்.

**இடபம்** குடும்ப சுகம் அதிகரிக்கும் நாள், வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும், நண்பர்களின் சந்திப்பால் நன்மைகள் கிடைக்கும், பண வரவுண்டு.

**மிதுனம்** வியாபார விருத்தி ஏற்படும் நாள், பழைய கடனை திருப்பிக் கொடுக்கும் வாய்ப்புண்டு, வீட்டுப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வீர்கள், உடல் நலம் சீராகும்.

**கடகம்** தொழிலில் புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், நீண்ட நாளைய ஆசை நிறைவேறலாம், சிறு வருமானங்கள் வந்து சேரலாம்.

**சிங்கம்** பெண்கள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம், வியாபார விருத்தியுண்டு, சுப செய்திகள் வந்து சேரும் நாள், வாகன சுகமுண்டு.

**கன்னி** தொழிலில் போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள். புதிய சிந்தனைகள் மனதில் குடிகொள்ளும். சுவாரஸ்யமான சூழ்நிலை அமையும்.

**துலாம்** புத்திசாலித்தனமான செயற்பாடுகளால் புகழ் அதிகரிக்கும் நாள், பெரிய மனிதர் வீடு தேடி வருவர், பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்** வளர்ச்சிப் பாதையை நோக்கி நகர்வீர்கள், உறவினர் பகை அகலும், நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், சுப செய்திகள் வந்து சேரும்.

**தனுசு** கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, சுப செலவுகள் அதிகரிக்கும், இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், தொழில் வளர்ச்சிக்காக பாடுபடுவீர்கள்.

**மகரம்** பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், தடைப்பட்ட காரியம் கைகூடும், பயண வாய்ப்புக்கள் கைகூடுவதற்கான அறிகுறி தோன்றும், உறவினர் வருகையுண்டு.

**கும்பம்** தொழிலில் புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள், தடைப்பட்ட பணிகளை மீண்டும் தொடர்வீர்கள், உடல் நலம் சீராகி உற்சாகமுடன் செயற்படுவீர்கள்.

**மீனம்** தேகநலன் சீராகும், திறமையானவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணைவர், தடைகள் விலகி தனவரவு பெருகும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அ.தி.மு.க. கூட்டணியில் இளைய தளபதி விஜய்!


எஸ்.எ.சந்திரசேகர்

கூட்டணி முயற்சிகள் அ.தி.மு.க. தரப்பில் எப்படி இருக்குதாம்?

ஜெயலலிதா கொட நாட்டில் இருக்கிறார். அவர் திரும்பி வந்ததும் சந்திக்கணும் என்று டைரக்டர் எஸ்.ஏ.சந்திரசேகர் ரொம்ப ஆர்வமா இருக்கிறார் என்று சினிமா வட்டாரத் திலிருந்து தகவல் வந்ததால் என்ன விவரம் என்று விசாரித்தால் அவருடைய மகன் விஜய் நடித்த



வேட்டைக்காரன், சுறா படங்கள் விடயத்தில் சன்.டி.வி மீது அப்பா மகன் இரண்டு பேருமே கடும் அதிருப்தியில் இருக்காங்களாம். அதோடு ஆளுங்கட்சித் தரப்பி லிருந்து அடிக்கடி பங்ஷனுக்கு விஜய்யை வரச் சொல்லி நெருக்கடி கொடுக்குறாங்களாம். இந்த நெருக் கடிகளால் தி.மு.க. அனுதாபியான எஸ்.ஏ.சந்திரசேகர், போயஸ் கார்டனின் ஆதரவை எதிர்பார்க் கிறாராம்.

ஏற்கனவே விஜய் டெல்லிக்கு போய் ராகுலைப் பார்த்துவிட்டு வந்தாரே?

தமிழ் நாட்டில் காங்கிரசை வளர்க்கணும் என்கிறதுக்காக சினிமா நட்சத்திரங்களுக்கு ராகுல் வலை விரித்துப் பார்த்தார். அதன் விளைவு தான் ராகு -விஜய் சந்திப்பு. ஆனா காங்கிரஸ் கட்சி தமிழ்நாட்டில் அன்ஃபிட்னு விஜய் நினைப்பதால் அங்கே போகவில்லை. ஆனா ராகுலை சந்தித்து விட்டு வந்ததிலிருந்து தி.மு.க.தரப்பிலிருந்து நீங்க அங்கே போய் சேரக் கூடாது என்று நிறைய நெருக்கடி வந்ததாக விஜய் தரப்பு சொல்லுது. அதனாலதான் அவங் கப்பா போயஸ் கார்டனுக்குப் போகலாமங்கிற எண்ணத்தில் இருக் காராம்.

2006 சட்டமன்றத் தேர்தல் சமயத் தில் கடைசி நேரத்தில் சரத்குமாரை கட்சியில் சேர்த்துக்கிட்டார் ஜெ.அது போல எத்தனை கோடி கொடுத்தாவது கமல்ஹாசனை அ.தி.மு.கவுக்கு ஆதரவா பிரச்சாரம் செய்ய வைக் கணும்னு முயற்சி செய்தார். கமல் கடைசி வரைக்கும் பிடிகொடுக்கலை. இந்த முறை விஜய் தரப்பு அ.தி. மு.கவை தானா தேடி வந்தா அது லாபம்தானே!

விஜய் நற்பணி இயக்கத்தில் உள்ள ரசிகர்களெல்லாம் இந்தத் தேர்தலில் விஜய் களமிறங்குவார் என்கின்ற எதிர்பார்ப்பில் இருக்காங்களாம். ஆனா விஜய்யைப் பொறுத்தவரை தேர்தலில் நேரடியாக இறங்கும் எண்ணம் இப்போதைக்கு இல்லை.

அதேநேரத்தில் ரசிகர்கள் சோர் வடைந்திடக்கூடாது என்று விஜய் அப்பா நினைக்கிறார். அதனால் ஜெ.வை சந்தித்து தேர்தலில் அ.தி. மு.கவை விஜய் நற்பணி இயக்கம் ஆதரிக்கும். எங்களுக்கு 30 சீட் கொடுங்கன்னு கேட்கப் போறாராம். அ.தி.மு.க.தரப்பிலிருந்து தே.மு.தி.க.வோடு நடத்தப்படும் பேச்சுவார்த்தைகள் இன்னும் முடி வுக்கு வரலை. விஜயகாந்த் தரப்பு கேட்கும் சீட்டை விட நோட்டு ரொம்ப அதிகமா இருப்பதால் விஜயகாந்த்துக்குப் பதில் விஜய்யை கூட்டணிக்குள் கொண்டு வந்தால் எப்படி இருக்கும்ங்கிற ஆலோசனை அ.தி.மு.க.தரப்பிலும் ஓடிக்கிட் டிருக்காம்.

நக்கீரன்

# இலக்கியத்திற்கான நோபல் பரிசு-2010

## ஒவ்வொரு எழுத்தும் மக்களுக்காக!

இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெரு நாட்டினை சேர்ந்த புகழ் பெற்ற எழுத்தாளர் மரியோ வர்கஸ் லோ சோவுக்கு(ஃகோர்கே மரியோ பெட்ரோ வர்கஸ் லேசோ) அறிவிக்கப்பட்டுள்ளது.

லோசே ஒரு சிறந்த நாவலாசிரியர், கட்டுரையாளர், பத்திரிகையாளர், அரசியல்வாதி என பன்முகங்களை கொண்டவர். அவரின் பேனா முனையானது அரசியலையும் கலாசாரத்தையும் சீரமைத்து எழுதும் 74 வயதாகும் லோசோ ஸ்பானிஷ் பேசும் உலகில் முக்கியமானதொரு எழுத்தாளர்.

லோசோ பெரு நாட்டில் அரிகுய்பா என்ற இடத்தில் 1936 இல் பிறந்தார். 1950இல் சான் மர்கோஸ் பல்கலைக் கழகத்தில்சட்டம் மற்றும் இலக்கியம் பயின்றார். படிப்பை முடித்த பின்னர் பல செய்தித்தாள்களில் எழுதினார். வெளிநாடுகளிலும் குறிப்பாக லண்டன் , பாரீஸ், மட்ரிட் நகரங் களில் தங்கி பத்திரிகைகளில் எழுதி வந்தார். அந்த காலகட்டத்தில் தான் நாவல் எழுதத் தொடங்கினார்.

ஸ்பானிய மொழியில் எழுதும் லோசோ 1960களில் நாய்களின் நகரம் எனப் பொருள்படும் ஸ்பானிய மொழிப் புதினம் என்பதை 1963 இல் எழுதினார். இது ஆங்கிலத்தில் தி டைம் ஆஃபதி ஹீரோ என்ற நாவல் மூலம் உலகளவில் வாசகர்களை ஈர்த்தது. அந்த நாவல் பெருவின் இராணுவ அக்கடமி பற்றியது.அதனால் தனது தாய் நாட்டிலேயே எதிர்ப்பை சம்பாதித்தார். 1980 ஆம் ஆண்டுகளில் உலகளவில் சிறந்த விற்பனையை தரும் இலத்தீன் அமெரிக்கா (தெற்கு மற்றும் மத்திய அமெரிக்க) எழுத்தாளராக உயர்ந்தார்.

அவற்றில் முக்கியமாக (Green House Conversation in the Cathedral Aunt Julia and the Scripwriter) மற்றும் பலவற்றை எழுதினார்.பெருநாட்டின் சர்வதிகார இமானு வேல் ஏ ஓதிரியா என்பவரின் ஆட்சியை அடிப்படையாக கொண்டு 1969 இல் கான்வர்சேசியோன் இன் கத்தேடரல் நாவலை எழுதினார்.

நகைச்சுவை புதினங்கள்,துப்பறியும் புதினங்கள்,வரலாற்றுப் புதினங்கள், பரபரப்பூட்டு அரசியல் புதினங்கள் என பலவகைப்பட்ட புனைவுப் படைப்புகளை எழுதியுள் ளார். இவரது பல படைப்புக்கள் திரைப்படங்களாக எடுக்கப்பட்டுள்ளன.


மரியோ வர்கஸ்லோசோ

இவருடைய (Aunt Julia and the Scripwriter) என்ற நாவல் அவருக்கும் ஆண்ட் ஜூலியாவுக்கும் இடையிலான உறவைப் பற்றிப் பேசுகிறது. இந்த நாவல் அப்போது இலத்தீன் அமெரிக்காவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

அதேபோல அவருடைய (The Feast of the Goat) என்ற நாவல் தென் அமெரிக்க நாடான டொமினிகன் ரிபப்ளிக்கில் அமெரிக்காவின் கைக்கூலியாக இருந்த ஓர் அதிபரைப் பற்றியது.

அவர் ஒரு சர்வதிகாரி. பெண் பித்தர். அவருடைய பட்டப் பெயர் வெள்ளாடு (கோட்) அவரை பற்றியது. விருந்தான வெள்ளாடு என்ற அந்த நாவல் அதிகாரம் என்பது அதைத் தக்கவைத்துக் கொண்டு இருப்பவர்களையும் அதற்குக் கீழே இருக்கும் மக்கள் கூட்டத்தையும் எப்படி எல்லாம் ஆட்டிப் படைக்கிறது என்பதற்கு இந்த நாவல் ஒரு சிறந்த உதாரணம்.

1990 இல் ஜனாதிபதி தேர்தலில் நின்று ஃபுஜிமோரியிடம் தோற்றுப் போனார். அதற்கு பிறகு லோசோ பெரும்பாலும் அரசியல் கட்டுரைகளையே எழுதி வருகிறார்.சுமாராக 30 நாவல்கள், நாடகங்கள்,கட்டுரைகள் எழுதியுள்ளார்.

1982 இல் நோபல் பரிசு பெற்ற கேபிரிலா கார்சியா மார்குவாஷ் (Gabriela Garcia Marques) அடுத்து இலத்தீன் அமெரிக்காவில் இலக்கியத் திற்கான நோபல் பரிசை பெறுபவர் லோசோதான்.

தற்சமயம் அமெரிக்க நாட்டில் பிரின்ஸ்டோன் பல்கலைக்கழகத்தில் (Princeton University) இலத்தீன் அமெரிக்காவை பற்றியப் பாடத்தை கற்பித்து வருகிறார்.

# நல்லிணக்க ஆணைக்குழுவில் சாட்சியமளிக்க ரணிலுக்கும் அழைப்பு விடுக்கப்படலாம் !

(கொழும்பு)

கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழுவின் அமர்வில் சாட்சியமளிக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவிற்கு அழைப்பு விடுக்கப்படலாம் என்று ஆணைக்குழு தகவல்கள் தெரிவித்தன.

அத்துடன் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்,நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் மற்றும் முன்னாள் அமைச்சர் மிலிந்த மொரகொட ஆகியோருக்கும் ஆணைக்குழு சார்பில் அழைப்பு விடுக்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. எனினும் நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதிப் பகுதி அமர்வுகளிலேயே இவர்களுக்கு அழைப்பு விடுக்கப்படும் என்றும் தகவல்கள் தெரிவித்தன.

ஆணைக்குழுவின் விசாரணை அமர்வுகள் மேலும் 6 மாத காலத்திற்கு கடந்த மாதம் நீடிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பில் மட்டும் இதுவரை 38இக்கும் மேற்பட்ட விசாரணை அமர்வுகளை நல்லிணக்க ஆணைக்குழு நடத்தியுள்ளது. அத்துடன் வெளிமாவட்டங்களிலும் அமர்வுகள் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஶ்ரீ-2)

# வைத்தியரின் கைப்பையை பறித்து சென்ற திருடர்கள்

(கொழும்புத்துறை)

யாழ்.போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் வைத்தியர் ஒருவரின் கைப்பை யாழ். ஆஸ்பத்திரி வீதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் பறித்துச் செல்லப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த 24 ஆம் திகதி மாலை 6.30 மணிக்கு இடம் பெற்றுள்ளது.

பறிபோன கைப்பையினுள் 25 ஆயிரம் ரூபா பணமும் கையடக்க தொலைபேசி மற்றும் தேசிய அடையாள அட்டை, ஏ.ரி.எம். அட்டை, ஸ்டெதஸ்கோப் என்பன இருந்துள்ளன.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் பணிபுரியும் குறித்த மருத்துவர் கடந்த 24 ஆம் திகதி மாலை 6.30 மணிக்கு கடமை முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்தபின் தொடர்ந்து வந்த இனந்தெரியாத நபர்கள் மோட்டார் சைக்கிளில் வந்து கைப்பையை பறித்து சென்றுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஶ்ரீ-3-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைவஸ்து பாவனையை முற்றாக ஒழிக்கும்வரை தேடுதல் தொடரும்

## பொலிஸ்மா அதிபர் எச்சரிக்கை

(கொழும்பு)

போதை வஸ்துப் பாவனையை முற்றாக ஒழிக்கும் வரை தேடுதல் தொடரும் என பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரிய எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதியின் போதைக்கு முற்றுப் புள்ளி திட்டத்திற்கமைவாக இதுவரை நடத்தப்பட்ட தேடுதல்கள் குறிப்பிடத்தக்க வெற்றியைக் கொடுத்துள்ளதாகவும் கூறினார்.

பொலிஸ் தலைமையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த காலத்தில் போதைப் பொருள் மற்றும் சட்டவிரோத மதுபானம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தேடுதல்கள் பற்றி பொலிஸ்மா அதிபர் விளக்கமளிக்கையில்,

கடந்த ஒன்றரை மாதத்தில் நாடு பூராவும் நடத்தப்பட்ட சுற்றி வளைப்பு தேடுதல்களின் போது போதைப் பொருள் மற்றும் மதுபானம் தொடர்பில் 20 ஆயிரத்து 722 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து 53 ஆயிரத்து 617 கிராம் போதைப்பொருட்களும் 3 இலட்சத்து 67 ஆயிரத்து 98 லீற்றர் சட்ட விரோத மதுபான வகைகளும் மீட்கப்பட்டன.

கடந்த ஒக்டோபர் 15 ஆம் திகதி முதல் நாடு பூராகவும் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்புத் தேடுதல்களில் பெருமளவு போதைப்பொருட்கள் பிடிப்பட்டன.

சட்டவிரோத சாராயம் தொடர்பில் தனியான பொலிஸ் குழுக்கள் தேடுதல் நடத்தின. போதைப் பொருட்கள் தொடர்பில் 16ஆயிரத்து 111 சுற்றிவளைப்புகள் நடத்தப்பட்டன. இதன் போது 16 ஆயிரத்து 401 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டனர். 670 பேருக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஹெரோயின் பாவனை மற்றும் விற்பனை தொடர்பில் 4ஆயிரத்து 412 சுற்றி வளைப்புகள் நடத்தப்பட்டதில் 7.51 கிலோ கிராம் போதைவஸ்துக்கள் பிடிபட்டன. 4ஆயிரத்து 413 பேர் கைது செய்யப் பட்டனர். 363 பேருக்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளோம்.

கஞ்சா தொடர்பான 10ஆயிரத்து 149 சுற்றி வளைப்புகள் நடத்தப்பட்டதில் 10 ஆயிரத்து 107 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதன் போது 51.57 கிலோ கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது. 307 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளோம். பாபுல் மற்றும் லேகியம் தொடர்பிலான தேடுதல்களின் போது ஆயிரத்து 535 பேர் கைது செய்யப்பட்டதோடு 2 ஆயிரத்து 34 கிலோ கிராம் போதைப்பொருட்கள் பிடிப்பட்டன.

பேருவளை பகுதியில் ஆயிரம் கிலோவுக்கும் அதிகமான பாபுல் மற்றும் லேகியம் என்பன மீட்கப்பட்டன.

மதுபானம் தொடர்பிலான 4 ஆயிரத்து 417 சுற்றிவளைப்புத் தேடுதல்கள் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது 4 ஆயிரத்து321 பேர் கைதானதோடு 3 இலட்சத்து 67 ஆயிரத்து 98 லீற்றர் சட்ட விரோத மதுபானங்கள் கைப்பற்றப்பட்டன.

மதுபானம் தயாரிக்கும் இடங்களை சுற்றி வளைத்து தேடுதல் நடத்தியதில் ஆயிரத்து 44 பேர் கைதானார்கள். இவர்களிட மிருந்து 3 இலட்சத்து 11 ஆயிரம் லீற்றர் மதுபானம் கைப்பற்றப்பட்டது.

மதுபான கடத்தல் தொடர்பில் ஆயிரத்து 54 பேர் கைதானதோடு 2 ஆயிரத்து 452 லீற்றர் மதுபானம் மீட்கப்பட்டது. மதுபானம் விற்பனை செய்வோர் 855பேரை கைது செய்ததோடு இவர்களிடமிருந்து 9ஆயிரத்து 319 லீற்றர் கைப்பற்றினோம்.

விளையாட்டுச்சங்கங்கள் மற்றும் இரவு நேர களியாட்ட விடுதிகளில் சட்டவிரோதமாக மதுபானம் விற்றது தொடர்பாக 301 பேர் கைதாகினர். இவர்களிடமிருந்து 9ஆயிரத்து 820 லீற்றர் மதுபானம் கைப்பற்றப்பட்டது. மதுபான வகைகளை சட்டவிரோதமாக வைத்திருந்தது தொடர்பில் ஆயிரத்து 970 பேர் பிடிபட்ட அதேவேளை இவர்களிட மிருந்து 9ஆயிரத்து 820 லீற்றர் மதுபானத்தைக் கைப்பற்றியுள்ளோம்.

ஜனாதிபதியின் போதைக்கு முற்றுப் புள்ளி திட்டத்திற்கு அமைவாக இந்தத் தேடுதல்கள் முன்னெடுக்கப்பட்டன. குறுகிய காலத்தில் குறிப்பிடத்தக்க வெற்றி கண்டுள்ளோம். மதுபானம் மற்றும் போதைப் பொருள் பாவனையை முற்றாக ஒழிக்கும் வரை எமது நடவடிக்கை தொடரும் என்று அவர் மேலும் கூறினார். (ஸ்ரீ-2)

# தேசத்தின் மகுடம் கண்காட்சி இம்முறை மொனராகலையில்

(கொழும்புத்துறை)

தேசத்தின் மகுடம் தேசிய மட்டக் கண்காட்சி மொனராகலை மாவட்டத்தில் நடைபெறவுள்ளது.

இதில் காட்சிப்படுத்துவதற்கு யாழ். மாவட்ட பாரம்பரிய உணவுகள் பாரம்பரிய சிற்பங்கள்,வணக்கத் தெய்வங்களின் உருவங்கள், கருங்கற்சிலைகள்,மரத்திலான சிலைகள் என்பன காட்சிப்படுத்தப்படவுள்ளன.

அவற்றின் புகைப்படங்கள் ,காட்சிப் படுத்த விரும்புபவர்கள் வடமாகாண கல்விக் கலாசார திணைக்கள பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-51)

## கன மழையையடுத்து

# இரணைமடுக் குளத்தின் வான் கதவுகள் திறப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள இரணைமடுக் குளத்தின் வான்கதவுகள் நேற்று திறக்கப்பட்டதாக இரணை நீர்பாசன திணைக்கள பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

நாட்டில் பெய்துவரும் கனமழை காரணமாக குளத்தின்நீர்மட்டம்28 அடி6 அங்குலம் அளவுக்கு உயர்ந்துள்ளதுடன் தொடர்ந்தும் நீர்தேங் கிக் கொண்டு இருப்பதானல் இக் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. ஸ்ரீ

# யாழ்.மாவட்டத்தில் இடம்பெறும் கலாசார சீரழிவை தடுப்பதற்கு கல்விச் சமூகம் முன்வர வேண்டும்

## யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நாட்டில் போர் ஓய்ந்து குடாநாட்டுக்கான தரை வழிப்பாதைகள் திறக்கப்பட்டுள்ள நிலையில் யாழ்.மாவட்டத்தில் பலவகையிலும் கலாசாரச் சீரழிவுகள் நடைபெறுவதை தடுப்பதற்கு கல்விச் சமூகம் முன்வர வேண்டுமென யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் வடமாகாண கல்வி, பண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சிற்கு கடிதம் ஒன்றை இம்மாதம் முதலாம் திகதி அனுப்பி வைத்துள்ளது.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

யாழ்.மாவட்டத்தில் கலாசாரச் சீரழிவுகள் இடம்பெறுவதை பத்திரிகைகள் மூலமும் இலத்திரனியல் ஊடகங்கள் மூலமும் செய்திகள் வெளிவருகின்றன.

இத்தகைய செயல்களில் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல்யமான பாடசாலைகளின் மாண்வர்கள் சம்பந்தப்பட்டதாக தெரிய வருகின்றது.

இவ்வாறான சம்பவங்கள் இதுவரை காலமும் யாழ்ப்பாணத்தில் நாம் பேணிக் காத்துவந்த கலை கலாசார விழுமியங்கள் சீரழிந்து போவதற்கு காரணமாகவுள்ளது.

எனவே ஒரு சமூகத்தை நல்வழிப்படுத்துவதற்கு மாணவப் பருவத்தில் இருந்தே வளர்த்தெடுக்கப்படுவது இயல்பான வழமையாகும். இந்தக் கடமையை கல்விச் சமூகம் மேற்கொள்ள வேண்டிய உடனடி அவசியம் ஏற்பட்டுள்ளது என்பதையே சுட்டிக்காட்டுகின்றது.

ஆகவே மேற்குறித்த செயற்பாடுகளை நிவர்த்திசெய்து பாடசாலை மாணவர்களை நல்வழிபடுத்த பின்வரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றோம்.

சிறந்த ஒழுக்கமுள்ள மாணவர்களை உருவாக்கும் பொறுப்பு ஆசிரியர் சமூகத்திற்கு உண்டு என்பதையும் அவர்கள் அக்கடமைகளை நிறைவேற்றவேண்டும்.

பெற்றோரிடம் அவர்களது பிள்ளைகள் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். தவறிழைக்கும் மாணவர்கள் சம்பந்தமாக போதிய ஒழுக்காற்று நடவடிக்கையினை பாடசாலை, வலய, மாவட்ட மட்டங்களில் எடுத்தல் வேண்டும்.

கைத்தொலைபேசி பாவனையினை பாடசாலை நேரங்களில் முழுமையாகத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பல கோரிக்கைகளைக் குறிப்பிட்டு அக் கடிதத்தை அனுப்பியுள்ளது. (ஸ்ரீ-4)

# மனிதனின் உடல்,உள,குடும்ப நலன்களை பாதிக்கும் காரணிகள்

## உளவளத்துறை உதவி விரிவுரையாளர் விளக்கம்

(கொழும்புத்துறை)

இயற்கை அனர்த்தங்கள்,போர் வன்முறைகள்,தனி நபருக்கும் சமூகத்திற்கும் இடையில் ஏற்படும் கருத்து முறன்பாடுகள் என்பன மனிதனின் உடல் உள குடும்ப நலன்களை பாதிக்கின்றன என்று யாழ். பல்கலைக்கழக உளவளத்துறை உதவி விரிவுரையாளர் செல்வி வி.மேனகா தெரிவித்துள்ளார்.

உளவியல் ஆற்றுப்படுத்தல் பயிற்றுநர்களுக்கு கடந்த 26ஆம் திகதி தொடக்கம் 28ஆம் திகதி வரை வதிவிடப்பயிற்சி பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தால் நடாத்தப்பட்டது.

இதில் வளவாளராக கலந்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டாவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் மனித வாழ்வு சுமை மிக்கதாக மாறி விட்டது. இதனால் மற்றவர்களோடு உரையாடத் துடிக்கின்றோம். உரையாடுவதன் மூலம் எமது உணர்வுகளை பகிர்ந்து கொள்ள விளைகின்றோம்.

இதை நம்பிக்கைக்குரிய ஒருவருடன் நாம் ஆழமாக பகிர்ந்து கொள்கின்ற போது ஆறுதல் அடைகின்றோம். ஆற்றுப்படுத்துபவர்கள் பிரச்சினைகளை உற்றுக்கேட்கும் வண்ணம் பயிற்சி பெறவேண்டும் என்று தெரிவித்தார். (ஸ்ரீ-3-51)


ஸ்ரீ அம்மா பகவான் சரணம்

**ஸ்ரீ அம்மா பகவானின் நேரடி தங்கபந்து தரிசனம்**





நாளை (05.12.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு தொல்புரம் சுழிபுரம் சிவபூமி முதியோர் இல்ல பாலச்சந்திரன் மண்டபத்தில் இந்தியா வரதபாளைய பத்தியலோகாவிலிருந்து இணையத்தளம் மூலம் நேரடியாக ஸ்ரீ அம்மா பகவான் தங்கப்பந்து தரிசனம் வழங்கவுள்ளதால் சகல பக்தர்களும் அரிய சந்தர்ப்பத்தை தவறிவிடாது இந்நிகழ்வில் பங்குபற்றி வாழ்க்கையில் புத்துணர்வும் மறுமலர்ச்சியும் ஆனந்தப்பேறும் அடைவதற்கு தங்கபந்து தரிசனத்தை பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

T.P:-0777651719

சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீக பிரார்த்தனை மையம்,
யாழ்.மாவட்டம்.

(சி-1726)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேல் மாகாண கல்வித் திணைக்களம்

# க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை -2010

# பயிற்சி வினாத்தாள் - கணிதம்-II

## பகுதி - A

**2 மணித்தியாலங்கள்**

- பகுதி A யில் இருந்து 5 வினாக்களையும் பகுதி B யிலிருந்து 5 வினாக்களையும் தெரிந்தெடுத்து 10 வினாக்களுக்கு விடை எழுதுக.
- ஒவ்வொரு வினாவின் சரியான விடைக்கும் பத்துப் புள்ளிகள் வழங்கப்படும்
- r ஆரையும் h உயரமும் உள்ள ஒரு திண்ம செவ்வக வட்டக்கூம்பின் கனவளவு $1/3\ \pi r^2 h$ ஆகும்.

**5 வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

1) நிறுவனம் ஒன்றின் விளம்பரம் வருமாறு.

> ரூ.42000 பெறுமதியான குளிர்சாதனப் பெட்டி ஒன்றை ரூ.6000 முதலில் செலுத்தி வீட்டிற்கு எடுத்துச் செல்லவும் மிகுதியை மாதமொன்றிற்கு ரூ.3325 படி 12 சமதவணைகளில் செலுத்தலாம்

(i) 12 தவணைகளுக்கு எஞ்சியிருக்கும் கடன் யாது?
(ii) மாதமொன்றிற்கான கடன் பகுதி எவ்வளவு?

(iii) மாத அலகுகளின் எண்ணிக்கை யாது?

(iv) அறவிடப்பட்ட வருடாந்த வட்டி வீதம் யாது?

(v) ஒருவருடத்தின் பின் குளிர்சாதனப் பெட்டியின் விலை 10% இனால் அதிகரிக்குமாயின் புதிய விலை யாது?

2) மரமொன்றிலிருந்த நீர்க்காகம் ஒன்று அருகிலுள்ள ஏரியில் குதித்து மீனொன்றைக் கவ்வியவாறு இன்னுமோர் மரத்தின் மீது சென்று அமர்ந்தது. நிலைக்குத்தாக நீர்மட்டத்திலிருந்து இடம் பெயர்ந்த தூரத்தை y எனவும் அதற்கொத்த நேரத்தை $x$ ஆகவும் கொண்டு சார்பானது $y = (x-1)(x-4)$ இனால் தரப்பட்டிருகிறது.
x, y ஆகியவற்றின் அலகுகள் முறையே செக்கன் (s), மீற்றர் (y) ஆகும். $x$ இன் சில பெறுமானங்களுக்குப் பொருத்தமான y இன் பெறுமானங்கள் அட்டவணையில் காணப்படுகின்றன.

| x | 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|---|---|
| y | 4 | .... | -2 | .... | 0 | 4 | 10 |

(a) (i) $x = 1, x = 3$ ஆகும் போது y இன் பெறுமானங்களைக் காண்க.

(ii) $x$ அச்சில் 10 சிறிய சதுரங்களை 1 அலகாகவும் y அச்சில் 10 சிறிய சதுரங்களை 2 அலகாகவும் கொண்டு வரைபை வரைக.

(b) வரைபை உபயோகித்து,
(i) காகம் நீரினுள் சென்ற அதிகூடிய ஆழத்தைக் காண்க.

(ii) காகம் நீரினுள் இருந்த நேரம் எவ்வளவு?


(iii) முதல் மரத்தில் காகம் இருந்த உயரத்திற்கும் பின்னருள்ள மரத்தில் இருந்த உயரத்திற்கும் உள்ள வித்தியாசம் யாது?

3) (a) (i) காரணி காண்க. $8a^2 - 32b^2$

(ii) விரித்தெழுதுக. $(x + 2y)^3$

(iii) சுருக்கி எழுதுக. $\sqrt{45} - 9\sqrt{5} + \sqrt{80}$

(b) வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பின்வருமாறு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. முதலாம் நாள் பொதியில் 3kg அரிசி, 2kg பருப்பு, சீனி என்பன அடங்கியிருந்தன. இரண்டாம் நாள் முதல் நாளை விட 4kg கூடுதலான அரிசியும் 1kg குறைவான பருப்பும் காணப்பட அதேவேளை சீனியின் அளவு சமமாகக் காணப்பட்டது.




(i) முதல் நாள் பொதியில் காணப்பட்ட பொருட்களின் நிறைகளைத் நிரைத் தாயத்தில் காட்டுக.

(ii) இரு நாட்களும் வழங்கப்பட்ட மொத்த நிறைகளை நிரல் தாயத்தில் காட்டுக.

4) ஆடைத் தொழிற்சாலை ஒன்று 100 நாட்களில் 8500 மேற்சட்டைகள் தயாரிப்பதை இலக்காகக் கொண்டிருந்தது. இத்தொழிற்சாலை 30 நாட்களில் தயாரித்த சட்டைகளின் விபரம் வருமாறு.


| நாளொன்றில் தயாரிக்கப்பட்ட சட்டைகளின் எண்ணிக்கை | 50-60 | 60-70 | 70-80 | 80-90 | 90-100 | 100-110 | 110-120 | 120-130 |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாட்களின் எண்ணிக்கை | 2 | 3 | 4 | 7 | 6 | 5 | 2 | 1 |

(i) ஆகார வகுப்பு யாது?

(ii) நாளொன்றில் தயாரிக்கப்படும் சட்டைகளின் இடை எண்ணிக்கையை முழு எண்ணில் காண்க.

(iii) குறித்த தொழிற்சாலை தன் இலக்கை அடைந்துள்ளதா? என வினக்குக.

5) (a) 2r ஆரையும் 12cm உயரமும் உள்ள உருளைவடிவ பாத்திரம் ஒன்றினுள் r ஆரையும் 12cm உயரமுமான கூம்பு ஒன்று வைக்கப்பட்டிருப்பதைப் படம் காட்டுகிறது. கூம்பு தவிர்ந்த பகுதியில் நீர் நிரப்பப்பட்டுள்ளது.




(i) கூம்பின் கனவளவை π,r இல் தருக.

(ii) பாத்திரத்தில் உள்ள நீரின் கனவளவு $44\pi r^2$ எனக் காட்டுக.

(iii) பாத்திரத்தில் இருந்து கூம்பை வெளியில் எடுத்தால் நீரின் உயரம் குறையும் அளவு யாது?

(b) மடக்கை வாய்ப்பாடுகளை உபயோகித்துச் சுருக்குக.

$$\frac{\sqrt{120.3}}{0.7328}$$

6) (a) தீர்க்க. $\frac{1}{x-1} - \frac{1}{2x} = 0$

(b) (i) $6l$ பழப்பானம் $x$ எண்ணிக்கையான குவளைகளில் சம அளவாக ஊற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. குவளை ஒன்றில் ஊற்றக் கூடிய பானத்தின் அளவு எத்தனை மில்லிலீற்றர்?

(ii) 4 குவளைகள் தவறுதலாக உடைந்ததால் மிகுதியில் $6l$ பானம் சம அளவாக ஊற்றப்பட்டது. இதனால் ஒவ்வொரு குவளையிலும் 150m$l$ எதிர்பார்த்ததைவிட அதிகமாக காணப்பட்டது. இத்தகவல்களை $x^2 - 4x - 160 = 0$ என்னும் சமன்பாட்டால் தரலாம் எனக் காட்டுக.

(iii) சமன்பாட்டைத் தீர்ப்பதன் மூலம் குவளைகளின் எண்ணிக்கை $x$ ஐ முழு எண்ணில் காண்க.

## பகுதி B

7) (a) மாலா புத்தகம் ஒன்றின் முதல் 10 பக்கங்களை முதலாம் நாள் வாசித்து முடித்தாள். பின்னர் வரும் ஒவ்வொரு நாளிலும் முந்தைய நாளைவிட 4 பக்கங்கள் அதிகமாக இருக்குமாறு வாசிக்கின்றாள்.

15ஆம்பக்கம் பார்க்க..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லண்டனில் ஜனாதிபதிக்கு விசேட விருது வழங்கி கௌரவம்

(கொழும்பு)

லண்டனில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இலங்கைக்கு ஆற்றிய சேவையைப் பாராட்டி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

லண்டன் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் இலங்கை சங்கத்தின் தலைவர் டிலான் பெர்னாந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இவ் விருதை வழங்கினார்.

இந்நிகழ்வில் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகப் பொதுச்சங்கத்தின் தலைவர் ஜேம்ஸ்



லென் மன்ட்டும் கலந்து கொண்டார்.(ஸ்ரீ-4)

# அஸ்வர் எம்.பி.க்கு சபாநாயகர் கண்டனம்

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் நேற்று ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தனவுக்கு எதிராக ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்ப முயன்ற அரசாங்கத் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வரை சபாநாயகர் கண்டித்து ஆசனத்தில் அமருமாறு பணித்தார்.

பிரிட்டனில் எல்.ரி.ரி.ஈ. செயற்பாட்டாளர்களுடன் இணைந்து செயற்பட்டதாக ஜயலத் ஜயவர்த்தன எம்.பி.மீது அரசாங்கத்தினால் சுமத்தப்படும் குற்றச்சாட்டு தொடர்பாக அஸ்வர் எம்.பி ஒழுங்குப் பிரச்சினையை எழுப்ப முயன்றார்.

அப்போது அவரை தடுத்த சபாநாயகர், ''ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புவதற்கு உங்களை அனுமதிக்க முடியாது. அதற்கு அடிப்படையில்லை.

ஒழுங்குப் பிரச்சினையென்ற பெயரில் செயற்பாட்டுக்கு இடையூறு ஏற்படுத்துகிறீர்கள்" எனக் கூறினார்.

அதன்பின் ஒழுங்குப் பிரச்சி னை எழுப்புவத ற்கு சபாநாயகரி டம் அஸ்வர் எம்.பி அனுமதி கோரினார்.



எனினும் அச் சந்தர்ப்பத்தில் ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப அனுமதியளிக்க முடியாது என சபாநாயகர் உறுதியாக தெரிவித்தார்.

அவ்வேளையில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்புவதற்காக எழுந்தார்.


எனினும் அஸ்வர் எம்.பி.க்கு அனுமதியளிக்காமல் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்ப அனுமதிப்பதை அரசாங்கத் தரப்பு எம்.பி.கள் ஆட்சேபித்தனர்.

ஆனால், ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சபாநாயகர் அனுமதியளிக்கவில்லை. (ஸ்ரீ-2)

## யுத்த காலத்தில் கொல்லப்பட்ட

# ஊடகவியலாளர்களுக்கு அரசு நட்டஈடு வழங்க வேண்டும்

## அரியநேத்திரன் எம்.பி.தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் யுத்த காலத்தில் கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு அரசாங்கம் நட்ட ஈடுகொடுக்க முன்வரவேண்டும். உயிரிழந்த இராணுவ வீரர்களின குடும்பங்களுக்கு பணம் ஒதுக்கப்படுகிறது.

அதேபோன்று, ஊடகவியலாளர்களையும் அரசு மதிக்கவேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

வரவு-செலவுத் திட்ட மீதான குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் சபையின் ஊடக சுதந்திரத்தைப் பாதுகாக்கும் சட்டத்தில் கைச்சாத்திட்டுள்ள அரசாங்கம் அதனைக் கடைப்பிடிக்கிறதா என்பது கேள்விக்குறியே. சிறியதொரு நாட்டில் யுத்தம் காரணமாக இதுவரை 41 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளர்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# 'நம்ம ஊரில் நத்தார்' மாபெரும் கலாசார விழா

(யாழ்ப்பாணம்)

மதங்களுக்கும் தேசிய நல்லிணக்கத்திற்குமான சிறுவர் அமைப்பு , ஜனாதிபதி அலுவலகம் , யாழ்ப்பாண தேவாலயங்கள் ஆகியவற்றின் அனுசரணையுடன் " நம்ம ஊரில் நத்தார் " எனும் மாபெரும் கிறிஸ்துமஸ் கலாசார நிகழ்வு எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஓட்டுமடத்திலுள்ள வண்ணார்பண்ணை மெதடிஸ்த ஆலய வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் இன, மத பேதங்கள் கடந்து நத்தாரைக் கொண்டாட சகலருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் இசை, நடனம், போட்டி நிகழ்வுகள் என்பன நடைபெறவுள்ளன. இந்நிகழ்ச்சிகளில் பங்குகொள்பவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும். அத்தோடு இந்நிகழ்ச்சி ரூபவாஹினி,நேத்திரா தொலைக் காட்சிகளில் ஒளிபரப்புச் செய்யப்படும். (ஸ்ரீ-4)

# கிளிநொச்சியில் சட்டவிரோத மின்சாரம் பெற்ற 115 பேருக்கு அபராதம்

(கொழும்பு)

கிளிநொச்சியில் சட்டவிரோதமான முறையில். மின்சாரத்தைப் பெற்றுக் கொண்ட 115 பேருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒருவார காலத்தில் இலங்கை மின்சார சபையினரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின் போது சட்ட விரோதமான மின்சாரத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

மின்சாரத்தை சட்டவிரோதமாகப் பெற்றுக்கொண்டவர்கள் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. சட்டவிரோதமான முறையில் மின்சாரத்தைப் பெற்றுக்கொண்ட குற்றத்திற்காக குறித்த நபர்களுக்கு 1.8 மில்லியன் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# சூரிய வெளிச்சத்துக்கும் நீரிழிவு நோய்க்கும் தொடர்பு உள்ளது

## இந்திய மருத்துவர்கள் தகவல்

சூரிய வெளிச்சத்துக்கும் நீரிழிவு நோய்க்கும் தொடர்பு உள்ளது என இந்திய மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். மனித உடலில் , கணையப் பகுதியில் சுரக்கும் "இன்சுலின்" ஓமோன், இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவை சீராக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

"இன்சுலின்" சுரக்க கல்சியம் மற்றும் விற்றமின் டி அவசியம் . இவற்றின் அளவு குறையும்போது , இரத்தத் தில் உள்ள சர்க்கரையின் அளவு உயர்ந்து , " நீரிழிவு நோய் " ஏற்படுகிறது.

இந்தியாவில் , நீரிழிவு நோய் உள்ளவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. உணவுக் கட்டுப்பாடு , மாறுபட்ட வாழ்க்கை முறைகள் , உடல் பருமன் மற்றும் மரபணு , மன அழுத்தம் போன்றவையே இதற்குக் காரணம்.

பால் சார்ந்த பொருட்கள் , பதப்படுத்தப்பட்ட தானியங்கள் மற்றும் எண்ணெய் வகைகள் மற்றும் கொழுப்பு நிறைந்த மீன்கள் ஆகியவற்றில், "விற்றமின் டி" நிறைந்துள்ளது. மாலைநேர வெயிலில் இருப்பதாலும் உடலில் விற்றமின் டி உற்பத்தி செய்யப்படுகிறது.

புதுடில்லி போர்டிஸ் ஹாஸ்பிடல் மருத்துவர்கள் குழு ஒன்று இதுபற்றிய ஆய்வில் ஈடுபட்டது.

இரத்தத்தில் உள்ள சர்க்கரைக்கும் , வெயிலுக்கும் நேரடித் தொடர்பு உள்ளதாக ஆய்வில் கண்டறியப்பட்டது.

ஆய்வுக்கு தலைமை வகித்த டாக்டர் அனூப் மிஸ்ரா இதுகுறித்து கூறியதாவது , இன்றைய அளவில் நகர்ப்புறங்களில் உள்ள பெரும்பாலான மக்கள் நீரிழிவு நோயால் பாதிக்கப்படுகின்றனர்.

கல்சியம் மற்றும் விற்றமின் டி குறைபாடுகள் தான் இதற்குக் காரணம்.

மாலைநேரத்தில், வெய்யிலில் காய்பவர்களுக்கு அல்லது விளையாட்டுப் பயிற்சி மேற்கொள்பவர்களின் உடலில் விற்றமின் டி உற்பத்தியாகும் என கூறப்படுகிறது.

இதுபற்றி, "போர்டிஸ்" மருத்துவமனையில் உள்ள 184 நோயாளிகளிடம் ஆய்வு நடத்தப்பட்டது. இதில் 92 பேர் இரண்டாம் வகை நீரிழிவு நோயில் பாதிக்கப்பட்டவர்கள்.

ஆய்வில் பங்கேற்றவர்களின் வயது , பாலினம் மற்றும் உடல் எடை போன்றவை கணக்கெடுக்கப்பட்டன. அனைவரும் விற்றமின் டி குறைபாடு உடையவர்கள். மாலை நேரங்களில் இவர்களை விளையாட்டுப் பயிற்சிகளில் ஈடுபடுத்தினோம். அதன்பின் , அவர்கள் உடலில் விற்றமின் டி அளவு அதிகரித்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. மாலை வெயிலில் 30 நிமிடங்கள் இருந்தால் , தேவையான விற்றமின் டி நமக்குக் கிடைக்கும்.

இதுபற்றி மேலும் தீவிர ஆய்வு களில் ஈடுபட்டுள்ளோம். இவ்வாறு மிஸ்ரா கூறினார். (ஸ்ரீ)



திருமறைக் கலாமன்றத்தின் 45ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு கலைத்தூது மணிமண்டபத்தில் நேற்று இடம்பெற்ற இரத்ததான நிகழ்வைப் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புலோலி தென்மேற்கு கந்த முருகேசனார் முன்பள்ளி விளையாட்டுப்போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் சி.தில்லைநாதன் மற்றும் பருத்தித்துறை கோட்டக்கல்வி அதிகாரி பா.இரகுநாதன், வடமராட்சி வலய ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.சுந்தரமூர்த்தி,முன்பள்ளி காணியை அன்பளிப்பு செய்த திருமதி எஸ்.ஆழ்வாப்பிள்ளை ஆகியோர் அழைத்துவரப்படுவதையும் நிலைய ஸ்தாப கர்களில் ஒருவரான வைத்தியகலாநிதி சி.பரராசசிங்கம் மங்கலவிளக்கேற்றுவதையும் வடமராட்சி வலய ஆங்கில பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் சி.சுந்தர மூர்த்தி, யாழ். மாவட்ட சனசமூக நிலைய உத்தியோகத்தர் திருமதி ஜெ.பரமேஸ்வரி ஆகியோர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- அல்வாய் செய்தியாளர்)

## ஹைகோப் குற்றவாளிக்கு பிணையில் செல்ல அனுமதி

(கொழும்பு)

ஹைகோப் நிதி மோசடியின் இரண்டாம் நிலை குற்றவாளியான வெலிங்டன் டேஹொட் நேற்று பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு மேல் நீதிமன்றத்தின் நீதிபதி சுனில் ராஜபக்ஷவினால் நேற்று அவர் ஒரு இலட்சம் ரொக்கப் பணத்திலும் 10 இலட்சத்துடனான இரண்டு சரீர பிணைகளிலும் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் அவரது வெளிநாட்டு கடவுச் சீட்டையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க உத்தர விடப்பட்டுள்ளது.

(ஶ்ரீ-2)

# நீர்வழிந்தோடக்கூடிய வகையில் வடிகால்களை அமைக்க தனியார் துறையினர் முன்வரவேண்டும்

## யாழ்.அரச அதிபர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலங்களாக கடும் மழை பெய்து வருகிறது இதனால் நகரின் முக்கிய பகுதிகள் வெள்ளக் கடாய் காட்சிதருகிறது. நீர் வழிந்தோட முடியாத வகையில் மனித செயற்பாடுகள் அதிகரித்தமையே இதற்கு காரணம் என யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இயற்கையாக நீர் வழிதோடக்கூடிய வகையில் வடிகால் அமைப்பதற்கு தனியார் துறையினர் ஒத்துழைக்க வேண்டும். நீர் வழிந்தோடும் பகுதிகளில் கட்டடங்கள், மதில்கள், வேறுபல செயற்பாடுகளால் தடைகள் ஏற்படுத்தப்பட்டு நீர் வழிந்தோட முடியாத நிலையுள்ளது. இதனால் நகரின் பல பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

மக்களின் ஒத்துழைப்பின் மூலமே அபிவிருத்திகளை முன்னெடுக்க முடியும். வடிகால்கள் புனரமைப்பது தொடர்பாக அண்மையில் வெளிநாட்டு நிறுவனமான ஜெய்க்கா நிறுவன பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியுள்ளேன்.

ஜெய்க்கா நிறுவனம் யாழ். மாவட்டத்தில் ஏற்கனவே 20 திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. அதில் பால் சேகரிப்பு உதவிகள், விவசாய உதவிகள் மற்றும் பயிற்சி வைத்தியசாலை, மீன்பிடிக்கல்லூரி என்பன அமைப்பதற்கும் குளங்கள் புனரமைப்பிற்கும் என பல்வேறு அபிவிருத்திகளை முன்னெடுத்து வருகிறது.

இதேவேளை தெல்லிப்பழை வைத்திய சாலையின் புனரமைப்பிற்கும் இந்த நிறுவனத்திடம் உதவிகள் கோரியுள்ளேன். இவ்வாறு வைத்திய, விவசாய ,கடற்தொழில் போன்ற துறைகளினை அபிவிருத்தி செய்ய ஜெய்க்கா நிறுவனம் உதவி வருகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

(ஶ்ரீ-2-6)

சங்கீத பூஷணம்
லயனல் திலகநாயகம் போல்
ஓராண்டு பூர்த்தி நினைவு



இசையாராதனை

காலம்:- 05.12.2010 ஞாயிறு
நேரம்:- காலை 9.00 மணி
இடம்:- நல்லை ஆதீனம்

இசை
குமுதா உமாகாந்தன்
குணராசா நக்கீரன்
சுகன்யா அரவிந்தன்
வாசஸ்பதி ரஜீந்திரன்
(அணிசெய் கலைஞர்களுடன்)

இசைத் தமிழின் தொன்மையும் திண்மையும்
நூல் வெளியீடு
❋ தலைமையுரை ❋ வெளியீட்டுரை
❋ மதிப்பீட்டுரை
செந்தமிழ் செவ்விசை இறுவட்டு வெளியீடு
வெளியீட்டுரை

மனிதருடன் 06.07.1941
இறைவனுடன் 05.12.2009

ஏழிசையாய் இன்னமுதாய் அவனியெலாம் போற்றுகின்ற
காழியர்கோன் செந்தமிழாய் கம்பன் கவியமுதாய்
ஆழ மிகு கங்கைநதி ஆற்றின் புதுப் புனலாய்
தாளமிசை பிசகாத சங்கீத ஞானத்தால்
மரமாக நிற்போரும் மசிகின்றவாறு
மகிழ்வோடு சங்கீத மடைதிறக்கின்ற
சுரராக லய விநோத சுரபியே நாயகமே
திலகநாயகமே பொருளுணர்ந்து தன்னொன் றிசைபாடும்
ஈழத்தமிழிசையின் ஏற்றம் நீ சங்கீத
ஆழம் மிகவுணர்ந்த கவிஞன் நீ கலைஞன் நீ
காலம் அழிக்கவொணா கற்பக விருட்சம் நீ
ஞாலம் உள்ளவரை நின்புகழும் நிலைத்திடுமே

இந்நிகழ்வில் தாங்களும் வருகை தந்து, மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

திலகநாயகம் போல்
குடும்பத்தினர்

(3155)

# இலங்கையில் வாரமொன்றுக்கு 2 எயிட்ஸ் நோயாளிகள் பதிவு

(கொழும்பு)

• இலங்கையில் வாரமொன்றுக்கு இரண்டு எயிட்ஸ் நோயாளிகள் பதிவாவதாக தேசிய பாலியல் நோய் தொடர்பான விசேட நிபுணத்துவ மருத்துவர் சுஜாதா சமரக்கோன் தெரிவித்துள்ளார்.

இதன்படி வாரமொன்றில் 350 எயிட்ஸ் நோயாளிகள் பதிவாவதாகவும் எயிட்ஸ் நோயைக்கட்டுப்படுத்த அனைவரும் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் 41 ஆயிரம் பாலியல் தொழிலாளர்கள் காணப்படுவதாகவும் நாள் ஒன்றுக்கு ஒரு தொழிலாளி சராசரியாக மூன்று பேருடன் தொடர்பு கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பற்ற பாலுறவினால் இவ்வாறு எயிட்ஸ் நோய் தொற்றுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட நிகழ்வுகளில் கலந்துகொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (ஶ்ரீ-2)

# முல்லைத்தீவில் அடைமழை காரணமாக ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பாதிப்பு

## மாவட்ட அரச அதிபர் தகவல்

(கொழும்பு)

நாடு முழுவதும் பெய்துவரும் கடும் மழை காரணமாக பல பிரதேசங்கள் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் வடக்கில் முல்லைத்தீவு மாவட்டத்தில் அடை மழை காரணமாக ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு ஆயிரத்து 120 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 387 பேர் பாதிப்படைந்துள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

இவர்களுக்குத் தேவையான உலர் உணவுகள் மற்றும் ஏனைய தேவைகளை வழங்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் கிளிநொச்சி பொன்நகர் பகுதியில் மழை காரணமாக 243 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாக மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

இவர்களுக்கு மாற்று இடங்களில் தங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாகவும் மேலதிக பாதிப்புக்களை தவிர்க்கும் பொருட்டு அதற்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து தயார் செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ஶ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விதிப்பு மாற்றமும் பொருளாதார தாக்கங்களும்

05

## ஓர் ஆய்வு

வீதான சமூகப் பொறுப்பு அறவீடு 01.04.2011 இலிருந்து நீக்கப்படுவதுடன் ஏனைய வரிகள் மீது விதிக்கப்பட்டிருந்த இத்தகைய அறவீடு உடனடியாக முடிவுக்கு வந்துள்ளது.

**(iii) பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அறவீடு.**

இத்தகைய வரி 01.01.2011 இலிருந்து நீக்கப்படும்.

**(iv) கையடக்கத் தொலைபேசி பாவனையாளர் அறவீடு.**

கையடக்கத் தொலைபேசிகளின் பாவனை மீது விதிக்கப்பட்டிருந்த இத்தகைய வரி 01.01.2011 இலிருந்து முடிவுக்கு வரும்.

**(v) சுற்றாடல் பாதுகாப்பு அறவீடு.**

தொலைத் தொடர்புச் சேவைகள் மீது அறவிடப்பட்ட இத்தகைய வரி நீக்கப்பட்டுள்ளது.

**(vi) குறித்துரைக்கப்பட்ட கட்டணம் மீதான நிறுத்தி வைத்தல் வரி**

தற்போது நடைமுறையிலுள்ள இத்தகைய வரி 01.04.2011 இலிருந்து முடிவுக்கு வரும்.

**(vii) விமான நிலைய மற்றும் துறைமுக அறவீடு**

மருந்துப் பொருட்களின் செலவீனத்தைக் குறைக்க இத்தகைய இறக்குமதிகள் விமான நிலைய மற்றும் துறைமுக அறவீட்டிலிருந்து விலக்களிக்கப்படும்.

10. சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களின் செலுத்தப்படாத வரிகளைப் பதிவழித்தல்

தற்போது வருடாந்தம் 100 மில்லியன் ரூபாவுக்கு குறைந்த விற்பனைப் புரள்வைக் கொண்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களின் 31.03.2009 வரையில் செலுத்தப்படாத வருமான வரி, பொருட்கள் சேவைகள் வரி ஆகியவற்றை பதிவழிப்பதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

அத்தகைய பதிவழித்தலுக்கு அதற்கு பின்னரான வரிச் சட்டங்களுக்கு அமைவாக ஒழுக வேண்டும் என்ற உத்தரவாதம் பெறப்படும். இத்தகைய நோக்கத்திற்காக வரி செலுத்துவோர் திணைக்களத்திடமிருந்து எதிர்கால இணக்கப்பாட்டிற்கான சான்றிதழொன்றை பெற்றுக் கொள்ளும்படி தேவைப்படுத்தப்படுவர்.


**முடிவுரை**

தற்போதைய இலங்கையின் வரிக்கட்டமைப்பு மிகவும் சிக்கலானது மட்டுமன்றி குறித்த முயற்சிகள் மீது பல வரி விதிப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டமையினால் வரி செலுத்துவோர் பல சிக்கல்களுக்கு முகம் கொடுத்ததுடன் இலங்கையின் அரசிறைக் குறிக்கோள்களும் எதிர்பார்த்த இலக்குகளை எட்டாமல் இருந்தன.

இந்தப் பின்னணியில் வரி விதிப்பு தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவும் பல பரிந்துரைகளை மேற்கொண்டிருந்தது.

ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் வரி தொடர்பான யோசனைகள் முக்கியமானதாக அபிவிருத்தியை மையமாகக் கொண்டிருந்தவை மட்டுமன்றி நாட்டின் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்குத் தேவையான வரி நிவாரணங்கள், தேவையற்ற வரிகளின் நீக்கம், பல வரிகளை ஒன்றிணைத்தல், சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகளுக்கான மேலதிக நிவாரணங்கள் போன்ற பல சிறந்த விடயங்களை உள்ளடக்கியிருப்பது சிறப்பம்சமாகும்.

இந்த வரவு - செலவுத் திட்டம் யுத்தத்திற்கு பின்னர் அனைத்தையும் உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட முதலாவது வரவு - செலவுத் திட்டம் மட்டுமன்றி முதலீட்டாளர்கள், வர்த்தகர்கள் மற்றும் உழைக்கும் வர்க்கத்தினர் அனைவருக்குமான பல வரி நிவாரணங்களை வழங்கியதன் மூலம் அனைவரது பாராட்டுதல்களையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (முற்றும்)




பாலசுந்தரம் சிவாஜி
B.A.Hons (Econ),
M.A.(Econ),MBA (Finance),
பிரதி ஆணையாளர்,
உள்நாட்டு இறைவரித்திணைக்களம்


# அரசாங்க திட்டங்களில் தமிழ்மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்

## த.தே.கூ.வலியுறுத்தல்

(கொழும்பு)

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் திட்டங்களில் தமிழ் மொழிக்கும் முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

அரசாங்கத்தின் பல திட்டங்களுக்கு சிங்கள மொழியில் பெயரிடப்படுவதுடன், அதற்கு நிகரான தமிழ்ப் பெயர்களை சூட்டுவது குறித்து கவனம் செலுத்தப்படுவதில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, சேமிப்புத் திட்டங்களுக்கு கூட சிங்களப் பெயர்கள் இடப்படுவதாக அவர் குறிப்பிட்டார். தேசிய மொழி அமைச்சு தொடர்பான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்ட போது அவர் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

ரஜரட்ட நவோதய, ரண் அருண, வனித வாசனா போன்ற பல சிங்கள சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்கள் பயன்படுத்தப்படுவதில்லை எனவும் நேரடியாக அதே சொல் பயன்படுத்தப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கோப் மற்றும் பாக் ஆகியவை தொடர்பான அறிக்கைகள் தமிழ்மொழியில் அச்சிடப்படுவதில்லை எனவும், இதனால் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிக்கல்களை எதிர்நோக்கி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# மாறு வேடத்தில் சென்று மக்களின் பிரச்சினைக்கு தீர்வு

## அமைச்சர் மேர்வின் புதுவியூகம்



(கொழும்பு)

மாறுவேடத்தில் மக்களிடம் சென்று அவர்களின் பிரச்சினைக்கு தீர்வு வழங்க தாம் நடவடிக்கை எடுக்க உள்ளதாக அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

மாறு வேடத்தில் மக்களுடன் மக்களாக கலந்து அவர்களின் பிரச்சினைகளைக் கண்டறிந்து கொள்ள உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.வரவு- செலவுத்திட்ட குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கணவன் -மனைவி பிணக்கு முதல் பாரிய பிரச்சினைகள் வரையில் அடையாளம் கண்டு அவை தொடர்பான அறிக்கை தயாரிக்கத் திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும் மோசடி பேர்வழிகளுக்கு தாம் உதவி செய்யப் போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார். நாட்டு மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் தொடர்பில் மூன்று மாத காலத்திற்குள் ஜனாதிபதக்கு அறிக்கை சமர்ப்பிக்க உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.ஒழுக்கமான சமூகமொன்றை கட்டியெ முப்பும் நோக்கில் தாம் மாறு வேடமிட்டு மக்களை சோதனை செய்ய உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

நூற்றாண்டுகளுக்கு முன்னர் அக்பர் என்ற சக்கரவர்த்தியும் இவ்வாறு மாறு வேடத்தில் சென்று ஆட்சி நடத்தியதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# பிரிட்டனில் ஏற்பட்ட அசௌகரியத்திற்காக அரசாங்கம் என்னை பலிக்கடாவாக்குகிறது

## ஜயலத் எம்.பி.தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஒக்ஸ்போர்ட் யூனியன் உரை இரத்துச் செய்யப்பட்டமையால் ஏற்பட்ட அசௌகரியங்களுக்காக அரசாங்கம் தன்னை பலிக்கடாவாக்க முயற்சிக்கிறது என ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன கூறியுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டத்தில் தான் பங்கு பற்றியதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை நிராகரித்த அவர், ஜனாதிபதியின் பிரித்தானிய விஜயத்தின் போது தான் பிரிட்டனில் இருக்கவில்லை எனக் கூறினார்.

பிரிட்டனில்நான் 24ஆம் திகதி முதல் 28ஆம் திகதிவரை இருந்தேன். அதன் பின் இத்தாலிக்குச் சென்றுவிட்டேன். ஜனாதிபதி நவம்பர் 29ஆம் திகதிதான் லண்டனுக்குச் சென்றார். எனது கடவுச் சீட்டை சோதிப்பதன் மூலம் அரசாங்கம் இதனை உறுதிப்படுத்திக் கொள்ளமுடியும் என ஜயலத் ஜயவர்த்தன கூறினார். (ஸ்ரீ-2)









யா/சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாலயத்தின் பரிசளிப்புவிழா அண்மையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் அதிபர் திருமதி ம.குணபாலன் மங்கல விளக்கேற்றுவதையும் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் மாணவர்களின் கலைநிகழ்வினையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வண்ணப் பொழுதில்

## யா/நெல்லியடி மத்திய ம

இணைப் பாடவிதான நி
மாகாண மற்றும் தேசிய மட்டங்களி
மாணவமணிகளை மனதார




### சாதனை நிகழ்வுகள்

**உதைபந்தாட்டம்**
13 வயது பெண்கள் - 2010
17 வயது ஆண்கள் - 2009

**எல்லே**
19 வயது ஆண்கள் - 2009

**சதுரங்கம்**
15 வயது பெண்கள் - 2004
15 வயது பெண்கள் - 2005

**உயரம் பாய்தல்**
15 வயது ஆண் - 2010

**நீளம் பாய்தல்**
11 வயது ஆண் - 2006
21 வயது பெண் - 2010

**100 மீற்றர் ஓட்டம்**
15 வயது ஆண் - 2004

**அஞ்சலோட்டம் (4x100m)**
13 வயது ஆண் - 2004

**குண்டு போடுதல்**
15 வயது பெண் - 2008
17 வயது பெண் - 2009
17 வயது பெண் - 2010

**துடுப்பாட்டம்**
17 வயது ஆண்கள் - 2010

**தமிழ்த்தினப் போட்டிகள்**
பா ஓதல் - 2008, 2010
கவிதையாக்கம் - 2009
குறுநாடக ஆக்கம் - 2010

**English Day Competition**
Copy Writing - 2005
Oratory - Gr.12 - 2008
Creative Writing Gr.7, Gr.8 - 2009

**கணிதப் புதிர்ப் போட்டி**
தரம் 6. - 2007
தரம் 6. 7. 11 - 2008
தரம் 7. 8. - 2009
தரம் 6,7,8,9,11 - 2010

**விஞ்ஞானப்புதிர்ப் போட்டி**
தரம் 6 - 2007
தரம் 7 - 2008

**சமூகவிஞ்ஞானப் போட்டி**
தரம் 9 - 2009

**மென்பொருளாக்கப் போட்டி**
2008, 2009


**ஸ்ரீலங்கா ஒலிம்பியாட்**
2008, 2009, 2010

Sri Lanka Genius - 2008
Sir Oliver Gunathilaka Award - 2008
World Childrens' Day - 2008
Mother ஸ்ரீ லங்கா - 2009
Do You Know? - 2010
ஜனாதிபதி சாரணர் விருது - 2010

## அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர் சங்கத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மதிப்பளிக்கும் நிகழ்வு

**காலம்**
2010.12.04,
சனிக்கிழமை,
பி.ப. 5.00 மணி

**இடம்**
கல்லூரி 'L' மண்டபம்

**தலைமை**
திரு.செ.சேதுராஜா
அதிபர்

**பிரதம விருந்தினர்**
திரு.வே.தி.செல்வரத்தினம்
மேலதிக மாகாணக்
கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்

**சான்று வழங்கல்**
திருமதி.சாரதாதேவி
செல்வரத்தினம்

இன்று நடைபெறும்
"வர்ண இரவு"
நிகழ்வில் மதிப்புறும்
விளையாட்டுத் துறை
சார்ந்த
வீர வீராங்கனைகளையும்
ஏனைய நிகழ்ச்சிகளில்
சாதனை படைத்த
மாணவமணிகளையும்
மனதாரப்
பாராட்டுகின்றோம்

...கத்தினர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழையில் பீடைகளும் அவற்றின் முகாமைத்துவமும்



கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

வாருங்கள் எம்மினிய உறவுகளே!


வரண்ட வலயமொன்றாலும் எமக்கு கிடைத்த பொக்கிஷமாம் முக்கனிகளுள் முதன்மைக்கனி வாழை.

எமது சந்ததியின் வழிசொல்வது போல் சுருக்கமாக, ''வாழையடி வாழை'' என எம்முன்னோர் விழித்ததிலிருந்து இதனது அருமை பெருமையை அனைவரும் அறிந்து கொள்ளலாம்.

இது விக்கனமில்லாதது,சிக்கனமானது, மலச்சிக்கலுக்கும் மருந்தாவது. எம் குலக் கொழுந்து மலர்ந்த போதும், அவரவர் திருமண பந்தத்தில் இணையும் போதும், இன்னும் மரணத்தின் வாசலினுள் இருக்கும் போதும் வாசலில் வெட்டி கட்டிவைத்து விளக்கம் சொல்லும் வாழையின் வரலாறு எமது வாழ்வியலுடன் பின்னிப் பிணைந்த தாகும்.

இடர்காலத்தின் போது வாழ்க்கையை, வாழிடத்தை, தொலைத்திருந்த எம்மக்க ளுக்கு ஆதாரமாக இருந்த ஒரேயொரு பழ வகையாக வாழை இருந்தது. அதன்பின்னர் நிலவும் சுமுகமான சூழலில் தென்பகுதிக்கு வாழைப்பழங்கள் குலை குலையாக எடுத்துச் செல்லப்படுகின்றன. இப்போது எங்களூர் வாழைக்கு மவுசு ஏற்பட்டிருக்கின்றது. தென் பகுதி வர்த்தகர்கள் நேரடியாக வாழைத் தோட்டத்திற்கே வருகை தந்து வாழைக் குலைகளை வாங்கி வாகனத்தில் ஏற்றிச் செல்வதையும் அவதானிக்க முடிகின்றது. இருந்தாலும் வாழைப்பழத்தினது விலை ஓரளவினதாக இருந்ததில்லை. அநேகமாக எங்களூர் இந்துக் கோவில்களினது திரு விழாக்கள் மற்றும் இந்து சமய நிகழ்வுகளு டன் வாழைப்பழத்திற்கு இருக்கும் தேவை கூடிக் குறைவதனாலும் அவ்வப்போது இயற் கையின் சீற்றத்தில் வாழை மரங்கள் அழி வதும் இதனது விலையில் மாற்றத்தை ஏற்ப டுத்தும் காரணிகளாகின்றன.






இவற்றுக்கு மேலாக வாழைச் செய்கை யில் பீடைகளின் தாக்கம் அதிகரித்திருப்பதும் அதனால் விவசாயப் பெருமக்கள் அவற்றி னைக் கட்டுப்படுத்த திக்கு முக்காடுவதனை யும் அறிய முடிகின்றது.

இவற்றினைக் கருத்தில் கொண்டு இனி வரும் கிழமைகளில் வாழைச் செய்கையில் பாதிப்பை ஏற்படுத்தும் பீடைகள் பற்றி விளக்க முனைகின்றேன்.

வாழையில் பல வகையான பீடைகள் சேதத்தை அல்லது பாதிப்பை ஏற்படுத்துகின் றன. குறிப்பாக வாழைக்குட்டியினூடாக காவப்பட்டுச் செல்லும் நோய்கள் தொடங்கி இன்னும் பலவகையான நுண்ணங்கி களால் ஏற்படுத்தப் படும் நோய்களிலி ருந்து பூச்சிப் பீடை கள், சிற்றுண்ணி கள் இவ்வாறா இந்த நிரல்படுத்தல் நீண்டு செல்கின்றது. (13-I)

இவையனைத் தையுமே விலாவாரி யாக அலசிப்பார்ப் பது நல்லது அல்ல வா. இதனை வாசிக் கும் வாழைச் செய் கையில் ஈடுபடும் எங்களூர் விவசாயிகளுக்கு.பயிர்ச் செய்கை மற்றும் பீடை முகாமைத்துவம் பற்றி மேலும் அறிவூட்ட ஆர்வம் கொண்ட காரணத்தி னால் விஞ்ஞானத்தையுங் கலந்து எழுத முற்படுகிறேன்.

வாசித்து பயனுறுக.மேலும் விளக்கம் தேவைப்பட்டால் அதனை ஒரு கடிதமாக்கி எமக்கதனை தெரிய வையுங்கள்.தெரிந்த பதிலுடன் உங்கள் வீட்டு வாசல் கதவை இக் கைகள் தட்டி நிற்கும்.

### சுத்தமான, சுகாதாரமான பயிர்ச் செய்கை

வாழை எங்களது சுபகாரியங்களுடன் ஐக்கியமானஒருபயிர். புல்லுமல்ல, செடிகொடி யுமல்ல இன்னும் மரமுமல்ல. ஆனால் பொய்த்தண்டுடன் (Pseudostem) எழுந்து நின்று குலை போடும் அதிசயமான தாவரமிது. எங்கள் உறவுகளை பரம்பரையாக காணும் பெறுமதி மிக்க கனிகளை தரும் அன்பு நிறைந்த மரமிது. எமது வாழ்வில் நடைபெறும் அநேகமான சம்பவங்களுடன் நெருக்கமாக உள்ள பழ வகை தாவரமாகியதால் எமது வாழ் வியலுடன் இதற்கும் நெருக்கமான பிணைப் பொன்று நெடுங்காலமாக உண்டு. (தொடரும்)

---

# அமெ.தூதுவரின் கருத்துகளுக்கு ஹெல உறுமய கட்சி கண்டனம்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தின் யுத்தக் குற்றங் கள் தொடர்பில் சர்ச்சைக்குரிய விக்கிலீக்ஸ் இணையத்தளம் வெளியிட்டுள்ள தகவல்கள் தொடர்பில் உள்நாட்டு பேரினவாத கட்சியான ஹெல உறுமய கண்டனம் வெளியிட்டுள் ளது.

அமெரிக்காவின் இலங்கைக்கான தூதுவர் பெட்டினியா புட்டினிஸ், யுத்தம் நிறைவடைந்த 7 மாதங்களின் பின்னர் தாம் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்துக்கு அனுப்பியி ருந்த இரகசியத் தகவலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அவரது சகோதரர்கள் மற்றும் முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன் சேகா ஆகியோர் யுத்தக் குற்றங்களுக்குப் பொறுப்பானவர் எனக் கூறியிருந்தார்.

இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ள புட்டி னிஸ், இலங்கை அரசாங்கத்திடம் மன்னிப் புக்கோர வேண்டுமெனவும் அவர் பதவியிலி ருந்து விலக வேண்டுமெனவும் ஹெல உறுமய விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஐக்கிய அமெரிக்கா அவ்வா றான நிலைப்பாடொன்றைக் கொண்டிருக்கு மானால் அது ஐக்கிய நாடுகள் சபைக்கு எதிராக செயற்படுகின்றமை புலனாவதாக தெரிவித்துள்ள ஹெல உறுமய, அமெரிக்க அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபையிடம் மன்னிப்புக் கோரவேண்டுமெனவும் வலிய றுத்தியுள்ளது. (ஸ்ரீ-2)

# கலைவிழாவும் பரிசளிப்பு விழாவும்

சுன்னாகம் கிழக்கு சனசமூக நிலையமும் சிவன் முன்பள்ளியும் இணைந்து நடாத்தும் கலைவிழாவும் பரிசளிப்பு விழாவும் மற்றும் பிரியா விடை நிகழ்வும் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சுன்னாகம் சிவன் தேவஸ்தான திருமண மண்டபத்தில் சனசமூக நிலையத் தலைவர் செ. சிவநட ராஜா தலைமையில்நடைபெறவுள்ளது.-

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஆலோ சனைக் கட்டத் திணைக்கள முகாமைத்துவப் பணிப்பாளர் கா.லிங்கேசன் கலந்துசிறப்பிக் கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக இலங்கைக் கான சிறுவர் நிதிய திட்ட அதிகாரி த.பகீரதராஜ், யாழ்.பிராந்திய சனசமூக உத்தியோகத்தர் ம.ஞானவேல்ராஜா, சுன்னாகம் கிழக்கு கிராம அலுவலர் வி.எம்.இராமலிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-9)

# அரசுக்கு எதிராக பிரசாரங்களில் ஈடுபடும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

வெளிநாடுகளுக்கு சுற்றுப் பயணங்களை மேற்கொண்டு அரசாங்கத்துக்கு எதிராக நடவடிக்கைகளில் ஈடுபடும் எதிர்க் கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக சட்ட நடவ டிக்கை எடுக்கப்படும் என தேசிய பாதுகாப் புக்கான ஊடக மத்திய நிலையத்தின் பணிப் பாளர் லக்ஸ்மன் ஹூலுகல்ல தெரிவித்துள் ளார்.

மத்திய நிலையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றின் போது அவர் இதனை தெரி வித்துள்ளார். வெளிநாடுகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் தலைதூக்க ஆரம்பித்துள்ளனர். அதற்கு புலம் பெயர்ந்த தமிழ் மக்களின் ஆதரவும் பலமாக வழங் கப்படுகின்றன.

இதற்கிடையில் எதிர்க்கட்சியின் சில உறுப் பினர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று வெளி யிடுகின்ற கருத்துக்களை மற்றும் அவர் களின் செயற்பாடுகள் என்பன விடுதலைப் புலிகள் மீண்டும் தலை தூக்குவதற்கு பலமாக இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில் அது அரசாங்கத்தின் மீது களங்கத்தை ஏற்படுத்தும் வகையில் அமைவதாகவும் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# பருத்தித்துறை மரக்கறிச் சந்தையில் வெள்ளம் தேங்காதவாறு நடவடிக்கை

## நகரசபை செயலாளர் தெரிவிப்பு

பருத்தித்துறை மரக்கறிச் சந்தையின் கிழக்குப் பக்கமாக வெள்ளநீர் தேங்கி நிற்ப தாகவும் கழிவுப் பொருட்கள் அகற்றப்படா துள்ளதாகவும் கடந்த 21 ஆம் திகதி வலம் புரியில் செய்தி வெளியாகியிருந்தது.

இது குறித்து பருத்தித்துறை நகரசபை செயலாளர் தெரிவிக்கையில்,

இச் சந்தையின் கிழக்குப் பக்க வாசலில் கழிவுப் பொருட்கள் எவையும் அகற்றப்படாது காணப்படவில்லை எனவும் கிழக்குப் பக்க வாசல் இனந்தெரியாதோரால் மூடிக் கட்டப் பட்டமையாலேயே சிறிதளவு வெள்ளம் இப் பக்கத்தில் தேங்கி நிற்கின்றது எனவும் தற் காலிகமாக வெள்ளம் தேங்காதவாறு நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அறிவித் துள்ளார்.

அத்துடன் இது தொடர்பாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய் யப் பட்டுள்ளதுடன் நீதிமன்ற நடவடிக்கையும் எடுக் கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதிக்கு எதிராக லண்டனில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஐ.தே.க.கடும் கண்டனம்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக லண்டனில் நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சி கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலி ஆதரவு அமைப்புக்களினால் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டங்களினால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஒக்ஸ்போர்ட் உரை இரத்து செய்யப்பட்டிருந்தது.

இந்த நடவடிக்கை முழு நாட்டுக்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் இதனை வன்மையாகக் கண்டிப்பதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியுடன் அரசியல் ரீதியான வேறுபாடுகள் காணப்பட்ட போதிலும் தமிழீழ விடுதலைப் புலி ஆதரவு நடவடிக்கைகளை ஏற்றுக் கொள்ள முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்படும் வகையிலான நடவடிக்கைகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சி இடமளிக்காது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை குறித்த ஆர்ப்பாட்டத்தில் ஜயலத் ஜயவர்த்தன பங்கு பற்றினாரா இல்லையா என்பது குறித்து தமக்கு கருத்து வெளியிட முடியாது என அவர் தெரிவித்தார்.

ஏனெனில் குறித்த ஆர்ப்பாட்டத்தில் அவர் கலந்து கொண்டாரா இல்லையா என்பது தமக்கு தெரியாதென அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

(ஸ்ரீ-2)

# ஜனாதிபதியின் லண்டன் விஜயம் இடைநடுவில் கைவிடப்படமாட்டாது

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் லண்டன் விஜயம் இடைநடுவில் நிறுத்தப்படமாட்டாதென திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அத்துடன் எவ்வாறான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டாலும் திட்டமிட்டபடி பிரித்தானிய விஜயம் நடைபெறும் என அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் ஜனாதிபதி உரையாற்றும் நிகழ்வு இரத்து செய்யப்பட்ட போதிலும் திட்டமிட்டிருந்த ஏனைய விடயங்கள் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியாவில் வாழும் தமிழீழ விடுதலைப்புலி ஆதரவு புலம்பெயர் தமிழர்களும் தேசத் துரோகிகளும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்தியதாக திவயின செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை ஜனாதிபதியின் லண்டன் விஜயத்திற்கு எதிர்ப்பை வெளியிடும் சூழ்ச்சித் திட்டத்தில் சில எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் தொடர்பு இருப்பதாக சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

(ஸ்ரீ-2)

# யாழ்.பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளில் வீதிகள் புனரமைப்பு

(கொழும்புத்துறை)

யாழ்.பிரதேச செயலக சமுர்த்தி உட்கட்டமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் "கமநெகும" கிராமங்களாக தெரிவு செய்யப்பட்ட யாழ் .பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கான வேலைத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் ஜே/70கிராம சேவகர் பிரிவில் டேவிட் வீதி கால்வாய்கள் புனரமைத்தல், ஜே/74 கிராம சேவகர் பிரிவில் மடத்தடி பேக்கறி ஒழுங்கை தார் வீதியாக அமைத்தல், ஜே/85 கிராம சேவகர் பிரிவில் நாவாந்துறை அம்மன் வீதி புனரமைப்பு, ஜே/84 கிராம சேவகர் பிரிவில் நாவாந்துறை கலைவாணி சனசமூக நிலைய வாய்க்கால் புதிதாக உருவாக்குதல், ஜே/84 கிராம சேவகர் பிரிவில் புதிய சோனகத் தெரு ஒஸ்மானியாக் கல்லூரி முன்பாக உள்ள வீ.எஸ்.ஒழுங்கை திருத்தல் ஆகியவற்றிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தாக யாழ். பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஸ்ரீ-3-51)

# தயாமாஸ்டர், ஜோர்ஜ்மாஸ்டர் தொடர்பான விசாரணைகள் பூர்த்தி

## புலனாய்வுப்பிரிவு நீதிமன்றில் அறிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஊடகப் பேச்சாளர் தயா மாஸ்டர் மற்றும் விடுதலைப்புலிகளின் மொழி பெயர்ப்பாளர் ஜோர்ஜ் மாஸ்டர் ஆகியோர் தொடர்பான விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் அறிவித்துள்ளனர்.

குறித்த சந்தேக நபர்கள் தொடர்பான விசாரணை அறிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியாகியுள்ளதென தெரிவித்துள்ளனர்.

தயா, ஜோர்ஜ் மாஸ்டர் தொடர்பான மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது புலனாய்வுப் பிரிவினர் இதனைக் குறிப்பிட்டுள்ளனர்.

இவர்களுக்கு எதிராக எவ்வாறான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களம் இதுவரையில் ஆலோசனை வழங்கவில்லை என சுட்டிக்காட்டியுள்ளனர்.

தயா மாஸ்டர் மற்றும் ஜோர்ஜ் மாஸ்டர் ஆகியோர் நீதிமன்றில் ஆஜராகியிருந்தனர்.

கடந்த 2009ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23ஆம் திகதி தயா மற்றும் ஜோர்ஜ் மாஸ்டர் ஆகியோரை படையினர் கைது செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)

# முன்பள்ளி கலைவிழா

உரும்பிராய் கணேசா சனசமூக நிலைய முன்பள்ளியின் வருடாந்த கலைவிழா நாளை ஞாயிற்றுக் கிழமை பி.ப. 1.30 மணியளவில் நிலைய மண்டபத்தில் தலைவர் ச.ஏகாம்பரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சர்வதேச லயன்ஸ் கழகத்தின் மாவட்ட சுகாதார இணைப்பாளர் வைத்தியகலாநிதி வை. தியாகராசா, சிறப்பு விருந்தினராக வலி.கிழக்கு மத்தியஸ்தர் சபைத்தலைவர் சி.மயில்வாகனம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ஸ்ரீ-4)




தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தால் வரணி நூலகத்துக்கு ஒருதொகை நூல்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன. இந்நூல்களை கழகத் தலைவர் லயன் எஸ்.தேவகுமார் வரணி நூலக ஆசிரியரிடம் கையளிப்பதை படத்தில் காணலாம்.

# 2010.12 04 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1259- பிரான்சின் ஒன்பதாம் லூயி இங்கிலாந்தின் மூன்றாம் ஹென்றியும் பாரிஸ் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இதன்படி நோர்மண்டி உட்பட ஐரோப்பாவில் உள்ள பிரெஞ்சுப் பகுதிகளுக்குஹென்றி உரிமை கொண்டாடுவதில்லை எனவும் ஆங்கில புரட்சியாளர்களுக்கு லூயி ஆதரவு வழங்குவதில்லை எனவும் .முடிவாகியது.
- 1639-ஜெரிமையா ஹொரொக்ஸ் முதன் முதலாக வெள்ளிக்கோள் சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் செல்வதை அவதானித்தார்.
- 1791- உலகின் முதலாவது ஞாயிறு இதழ் தி ஒப்சேர்வரின் முதலாவது இதழ் வெளிவந்தது.
- 1829-ஆங்கிலேய ஆட்சியின் கீழ் இருந்த இந்தியாவில் சதி முறையை ஒழிக்க ஆளுநர் வில்லியம் பெண்டிங்க் பிரபுவால் சட்டம் நிறைவேற்றப்பட்டது.
- 1918-முதலாம் உலகப் போரை முடிவுக்குக் கொண்டுவரும் பொருட்டு பேச்சுவார்த்தை நடத்த ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி வூட்ரோ வில்சன் பிரான்ஸ் சென்றார். பதவியில் உள்ள அமெரிக்க ஜனாதிபதி ஒருவர் ஐரோப்பா சென்றது இதுவே முதற் தடவையாகும்.
- 1943- இரண்டாம் உலகப் போர்: யூகொஸ்லாவியாவின் எதிர்ப்புத் தலைவர் மார்ஷல் டீட்டோ ஜனநாயக யூகொஸ்லாவிய அரசாங்கம் ஒன்றை தற்காலிகமாக அமைத்தார்.
- 1945-ஐக்கிய அமெரிக்கா ஐ.நாவில் இணைவதற்கு ஒப்புதல் அளித்து செனட் அவை வாக்களித்தது.
- 1952- லண்டனை குளிர் மேக மூட்டம் சூழ்ந்தமையாலும் காற்று மாசடைந்தமையாலும் அடுத்தடுத்த வாரங்களில் மட்டும் 12 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.
- 1957- ஐக்கிய இராச்சியத்தில் லூவிஷாம் என்னுமிடத்தில் இடம்பெற்ற தொடரூந்து விபத்தில் 92 பேர் கொல்லப்பட்டனர்.
- 1958-பிரெஞ்சு அதிகாரத்தின் கீழ் டொஹெமி சுயாட்சி உரிமை பெற்றது.
- 1959-ஐக்கிய அமெரிக்காவின் மேர்க் குரித் திட்டத்தின் கீழ் சாம் என்ற குரங்கு 55 மைல்கள் உயரம் கொண்டு செல்லப்பட்டு பாதுகாப்பாகப் பூமி திரும்பியது.
- 1967-வியட்நாம் போர்: ஐக்கிய அமெரிக்கா மற்றும் தெற்கு வியட்நாம் படைகள் மேக்கொங் டெல்ட்டா பகுதியில் வியட்கொங் படைகளுடன் மோதினர்.
- 1971-இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் ஏற்பட்ட கொந்தளிப்பான நிலைமையை ஆராய ஐ.நா பாதுகாப்பு அவை அவசரமாகக் கூடியது.
- 1971-பாகிஸ்தானின் கடற்படையினரையும் கராச்சி நகரையும் இந்தியக் கடற்படையினர் தாக்கினர்.
- 1976-ஆச்சே விடுதலை இயக்கம் அமைக்கப்பட்டது.
- 1977-மலேசியாவின் விமானம் ஒன்று கடத்தப்பட்டு ஜோகோர் என்ற இடத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியதில் 100 பேர் கொல்லப்பட்டனர்.
- 1984-குவைத் விமானம் ஒன்றை ஹெஸ்புல்லா அமைப்பினர் கடத்தியதில் நான்கு பயணிகள் கொல்லப்பட்டனர்.
- 1991- டெரி அண்டர்சன் என்ற அமெரிக்க ஊடகவியலாளர் கடத்தப்பட்டு 7 ஆண்டுகளின் பின்னர் பெய்ரூட்டில் விடுவிக்கப்பட்டார்.
- 1991-ஐக்கிய அமெரிக்காவின் பான் ஆம் விமான சேவை தனது சேவைகளை நிறுத்திக் கொண்டது.
- 1992-ஐக்கிய அமெரிக்கா சோமாலியாவுக்கு 28 ஆயிரம் அமெரிக்கப் படை வீரர்களை அனுப்பியது.
- 2005-ஹொங்கொங்கில் பல்லாயிரக் கணக்காணோர் ஜனநாயகம் வேண்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## பிறப்புக்கள்

- 1919-ஐ.கே.குஜரால், 15ஆவது இந்தியப் பிரதமர்.
- 1969-ஜெய்-சி, அமெரிக்காவின் ராப் இசைக் கலைஞர்
- 1977-அஜித் அகர்கர், இந்தியத் துடுப்பாட்ட வீரர்

## இறப்புக்கள்

- 1122-ஓமர் கய்யாம், பாரசீகக் கவிஞர் (பி.1048)
- 1976-ந.பிச்சமூர்த்தி, தமிழ் இலக்கிய முன்னோடிகளுள் ஒருவர் (பி.1900)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்போன் பேசிக்கொண்டு வாகனம் ஓட்டுவதால் ஏற்படும் விபத்துக்களைத் தடுக்க புதிய கருவி

## அமெ. ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடிப்பு



(வோஷிங்டன்)


செல்போனில் பேசிக்கொண்டே நடப்பது, வாகனம் ஓட்டுவது விபத்துக்குக் காரணமாகிறது. பேசியே தீருவேன் என்று விடாப்பிடியாய் இருப்பவர்கள் மத்தியில் சட்டங்களும் அபராதங்களும் எடுபடுவதில்லை. இந்த விதி மீறல்களும் அதன் காரணமாக விபத்துகளும் உலகம் முழுவதும் நடைபெறுகிறது.

இப்பிரச்சினைக்கு தீர்வு கண்டிருக்கின்றனர் அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள். தீவிர ஆராய்ச்சி மேற்கொண்டு பிரத்தியேக சொப்ட் வெயார் மற்றும் கருவியை கண்டுபிடித்துள்ளனர். காரில் இதைப் பொருத்திவிட்டால் ஏறியதுமே செல்போன் இணைப்புத் தானாக துண்டிக்கப்படும். அவசரத்துக்கு செல்போனில் பேச வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால் வாகனத்தை ஓரமாக பார்க் செய்துவிட்டு பேசிக்கொள்ளலாம். மீண்டும் காரில் ஏறியவுடன் இணைப்புப் துண்டிக்கப்பட்டுவிடும்.

இக்கருவி பொருத்துவதை கட்டாயமாக்கும் வகையில் அமெரிக்காவில் சட்டம் இயற்றப் படவுள்ளது. முதற்கட்டமாக 4 சக்கர வாகனங்களுக்கு இந்த வசதி அறிமுகப்படுத்தப்படும். பின்னர் படிபடியாக 2 மற்றும் 3 சக்கர வாகனங்களுக்கும் விரிவுபடுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த முறை அறிமுகமானால் விபத்துகள், உயிரிழப்புகள் கணிசமாகக் குறையும் என்கிறனர் அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் . இந்தியாவில் வருமா? தெரியவில்லை எங்கள் உயிரை காப்பாற்ற நீங்கள் யார் என்று கேட்டு போராட்டம் செய்வார்கள். (ஸ்ரீ-2)

# பழங்கள், காய்கறிகள் சாப்பிட்டாலும் புற்றுநோய் ஆபத்தை தடுக்க முடியாது



பழங்கள், காய்கறிகளை அதிகம் சாப்பிடுவதால் புற்றுநோய் வராமல் தடுக்க முடியும் என்பதற்கு ஆதாரம் எதுவும் இல்லை என்று ஒக்ஸ்போட் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

புற்றுநோய் பாதிப்பு ஏற்படுவதற்கு புகையிலை பொருட்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

காய்கறிகள், பழங்கள் உள்ளிட்டவற்றை அதிகம் சாப்பிட்டு வந்தால் புற்றுநோயை கட்டுப்படுத்த முடியும் என்று கூறப்பட்டு வந்தது. இந்தக் கருத்துக்கு ஒக்ஸ்போட் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் முற்றுப்புள்ளி வைத்துள்ளனர்.

புற்றுநோய் மற்றும் அது தொடர்பான உணவுப் பழக்க வழக்கங்கள் குறித்து ஒக்ஸ் போட் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக ஆய்வு மேற்கொண்டிருந்தனர்.

### ஆய்வில் தகவல்


அந்த ஆய்வின் முடிவு சமீபத்தில் பல்கலைக்கழகத்தின் மருத்துவ இதழில் வெளியிடப்பட்டது.

அதில் கூறப்பட்டுள்ளதாவது,

புற்றுநோயை காய்கறிகள் மற்றும் பழங்கள் சாப்பிடுவதன் மூலம் கட்டுப்படுத்த முடியும் என்று கூறப்படுவதற்கு ஆதாரம் எதுவும் இல்லை. முறையான உணவு பழக்கவழக்கங்கள் , சிகிச்சை முறை உள்ளிட்டவற்றின் மூலம் மட்டுமே அதை கட்டுப்படுத்த முடியும். காய்கறிகளும், பழங்களும் நமது உடல் நலத்திற்கு மிக முக்கிய பங்காற்றுகின்றன. ஆனால் , புற்றுநோயை அவை கட்டுப்படுத்தும் என்பது நிரூபிக்கப்பீடவில்லை.

புகைப்பிடிக்கும் பழக்கம், மது, உடல் பருமன் உள்ளிட்ட காரணங்களே புற்றுநோய்க்கு முக்கிய காரணம். உடல் பருமன் ,குடல், கிட்னி உள்ளிட்ட பகுதிகளில் புற்றுநோய் ஏற்படுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தும்.

புகைப்பிடிப்பதால் நுரையீரல் ,வாய், குடல் பகுதிகளில் புற்று நோய் பாதிக்கும் நோயை ஆரம்பத்திலேயே கண்டுபிடிப்பதன் மூலம் குணமாக்கக்கூடிய வாய்ப்பு அதிகரிக்கும். இவ்வாறு ஆய்வறிக்கையில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2-14)



மலேசியா,கோலாலம்பூரில் நடந்து வரும் மோட்டார் வாகன கண்காட்சியில் கார் போலவும் மோட்டார் சைக்கிள் போலவும் வடி வமைக்கப்பட்டிருந்த ஜப்பானிய தயாரிப்பான புது மொடல் வாகனத்தைப் படத்தில் காணலாம்.

# இஸ்ரேல் வனப்பகுதியில் பரவிய காட்டுத்தீயால் 40 பேர் பலி



(ஜெருசலேம்)

இஸ்ரேலின் வடக்கு மாகாணத்தில் உள்ள ஹெய்பா வனப்பகுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் 40 க்கும் மேற்பட்டோர் பலியாகினர்.

இஸ்ரேலின் தலைநகர் ஜெருசலேமின் வடக்கு பகுதியில் இருந்த சிறைச்சாலையில் இருந்த சிறைக் கைதிகள் மற்றும் சிறைக்காவலர்கள் உட்பட 40 க்கும் மேற்பட்டோர் தீயில் கருகி பலியாகினர். மேலும் பலர் தீயில் சிக்கியுள்ளதாக ஹராடிஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. தீயை அணைக்க தீயணைப்புப் படையினர் வரவழைக்கப்பட்டு மேலும் தீ பரவாமல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக இஸ்ரேல் போர்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (ஸ்ரீ-2)






சுவிட்சர்லாந்து, சூரிச் நகரில் நடைபெற்ற கூட்டத்தில், அந்நாட்டு ஜனாதிபதி டோரிஸ் லூதர்ட்(வலது), இங்கிலாந்து பிரதமர் டேவிட் கமரூன் ஆகியோர் சந்தித்து கலந்துரையாடினர்

# ஜப்பானில் பறவைக் காய்ச்சல்; 21 ஆயிரம் கோழிகள் அழிப்பு


ஜப்பானில் பறவைக் காய்ச்சல் பரவுவதால் இதற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 21 ஆயிரம் கோழிகள் கொல்லப்பட்டுள்ளன.

ஜப்பானின் ஷிமானி மாகாணத்தின் யாசுகி நகரில் உள்ள கோழி பண்ணையில் ஐந்து கோழிகள் பறவைக் காய்ச்சல் கிருமிகளால் பாதிக்கப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப் பட்டது.

10 கிலோ மீற்றர் தூரத்துக்கு இந்த நோய் பரவும் அபாயம் இருப்பதால் இந்தப் பகுதியில் உள்ள பண்ணைகளில் 21 ஆயிரத்து 500 கோழிகள் குழி தோண்டி புதைக்கப்பட்டன.

மூன்று வாரத்துக்குள் இந்தப் பகுதியில் பறவைக் காய்ச்சலே இல்லாத வகையில் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.(ஸ்ரீ-2)

# சூரியனுக்கு உரிமை கொண்டாடும் ஸ்பெயின் நாட்டுப் பெண்



(லண்டன்)

ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த ஒரு பெண் சூரியனுக்கு உரிமை கொண்டாடுகிறார். ஸ்பெயின் நாட்டின் விகோ நகரை சேர்ந்தவர் ஏஞ்சலஸ் துரன் வயது (49) ஆகும். இவர் சூரியன் தனக்கு உரிமையான சொத்து என கூறி வருகிறார்.

ஏற்கனவே அமெரிக்காவை சேர்ந்தவர்கள் சந் திரன், செவ்வாய் , சுக்கிரன் ஆகிய கிரகங்களுக்கு உரிமை கொண்டாடி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

15 கோடி கிலோ மீற்றர் தொலைவில் உள்ள சூரியனுக்கு நான் தான் உரிமையாளர் என கூறி அதற்குரிய ஆவணங்களை தயார் செய்து ஸ்பெயின் தொழில்துறை அமைச்சரிடம் ஒப்படைத்துள்ளார்.

சூரியசக்தி மூலம் மின்சாரம் தயாரிப்பவர்கள் அதற்கு உரிய கட்டணத்தை தனக்கு செலுத்த வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

இதில் வரும் வருவாயில் 50 சதவீதத்தை அரசிடம் கொடுத்து விடுவதாகவும் 20 சதவீதத்தை ஓய்வூதிய நிதிக்கு அளிக்கவும் 10 சதவீத நிதியை உலகத்தின் பசி ,பிணி போக்கும் திட்டத்துக்கு வழங்கப்போவதாகவும் 10 சதவீத நிதியை ஆராய்ச்சிக்காக செலவிடப்போவதாகவும் மீதமுள்ள 10 சதவீத நிதியை தான் வைத்துக் கொள்ள போவதாகவும் தெரிவித்துள்ளார்.

கோடையினால் ஏற்படும் வறட்சி , வெயில் கொடுமையினால் பலி போன்றவற்றுக்கு இவர் நஷ்ட ஈடு வழங்குவாரா என்பது தெரியவில்லை. (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06ஆம் பக்கத் தொடர்ச்சி.....

(i) முதல் மூன்று நாட்களிலும் வாசித்த பக்கங்களின் எண்ணிக்கையை வரிசையாக எழுதுக. இது ஒரு கூட்டல் விருத்தியில் அமையும் எனக் காட்டுக.

(ii) மாலாவின் தங்கையும் அதே நாளில் அப்புத்தகத்தை வாசிக்கத் தொடங்குகிறாள். முதல்நாள் 3 பக்கங்களும், அடுத்துவரும் நாட்களில் முந்தைய நாளைவிட 5 பக்கங்கள் அதிகமாக இருக்குமாறும் வாசித்தால் எத்தனையாவது நாள் இருவரும் சம எண்ணிக்கையான பக்கங்களை வாசித்து முடித்திருப்பார்கள்?

(b) 24, 12, 6 ..... என்பன பெருக்கல் விருத்தி ஒன்றின் முதல் மூன்று உறுப்புகளாகும்.

(i) பொது விகிதம் யாது?

(ii) இவ்விருத்தியின் 7ம் உறுப்பைக் காண்க.

8) cm/mm அளவிடை உள்ள ஒரு நேர்விளிம்பையும் கவராயத்தையும் மாத்திரம் பயன்படுத்தி அமைப்புக் கோடுகளை தெளிவாகக் காட்டி.

(i) $AB = 9cm, \hat{ABC} = 120^0, BC = 7.5cm$ ஆகவுள்ள முக்கோணி ABC யை அமைக்க.

(ii) பக்கம் AB ஐ B யில் தொடுவதும், Cயினூடாக செல்வதுமான வட்டத்தை வரைந்து மையம் O எனப் பெயரிடுக.

(iii) பக்கம் AC யும் வட்டமும் வெட்டும் புள்ளியை D எனக் குறித்து BD ஐ இணைக்க.

(iv) $\hat{BOC}$ இற்கும் $\hat{BDC}$ இற்கும் உள்ள கேத்திரக்கணிதத் தொடர்பு யாது? காரணம் தருக.


9) (a) சங்கீதக் கதிரை விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றிய 15 மாணவர்களில் 6 பேர் ஆண்கள் ஆவர்.

(i) முதலாவது சுற்றில் பெண் ஒருவர் போட்டியிலிருந்து நீக்கப்படுவதற்கான நிகழ்தகவு யாது?

(ii) முதலிரு சுற்றுக்களிலும் இரு போட்டியாளர்கள் நீக்கப்படுவதைக் காட்டும் மரவரிப்படத்தை வரைக.

(iii) இரு சுற்றுக்களிலும் ஆண்கள் நீங்கும் நிகழ்தகவு யாது?

(b) படத்திலுள்ள வென்னுருவிற்கேற்ப விடை எழுதுக.




(i) Aயிற்கும், C யிற்கும் உள்ள தொடர்பை தொடைக்குறியீட்டில் தருக.

(ii) மூட்டற்ற தொடைகள் இரண்டு தருக.


(iii) இப்படத்தைப் பிரதிபண்ணி $C'\cap(A\cup B)$ இனை நிழற்றுக.

10) (a) "வட்ட நாற்பக்கல் ஒன்றின் எதிர்க்கோணங்கள் மிகை நிரப்பிகளாகும்" என்னும் தேற்றத்தை உபயோகித்து இந்நாற்பக்கலின் புறக்கோணம் ஒன்றிற்குரிய தொடர்பை வரிப்படம் ஒன்றின் உதவியுடன் எழுதுக.

(b) Oஐ மையமாகவுடைய வட்டமொன்றின் பரிதியில் $\hat{PQR}$ என்னும் சமபக்க முக்கோணியின் உச்சிகள் அமைந்துள்ளன. Pயில் வரையப்பட்ட விட்டம் PS ஆகும். நீட்டப்பட்ட PQ, RS என்பன T யில் சந்திக்கின்றன.

(i) இத்தகவல்களைக் காட்டும் பரும்படி வரிப்படத்தை வரைக.


(ii) QSR இன் அளவு யாது?




(iii) PS = ST எனக் காட்டுக.

(iv) படத்திலுள்ள வேறு ஓர் இருசமபக்க முக்கோணியை பெயரிடுக.

11)




(i) PQRS என்னும் இணைகரத்தின் பக்கம் PQ ஆனது T வரை நீட்டப்பட்டுள்ளது, RQT இன் இருகூறாக்கியை நீட்டிய SR ஆனது Uஇல் சந்திக்கின்றது, $\hat{RPQ} = \hat{UQT}$ ஆகும்.

வரிப்படத்தை உமது விடைத்தாளில் பிரதிபண்ணித் தரவுகளைக் குறிக்க. பின்வருவனவற்றை நிறுவுக.

(ii) PQUR ஒரு இணைகரம்

(iii) QR = RU


(iv) PU, RQ என்பன O இல் இடைவெட்டுகின்றன PQ = 2OQ எனக் காட்க.

12) உருவில் AB என்னும் கம்பமானது முறையே 10m, 8m நீளமான BP, CQஎன்னும் ஆதாரங்களால் தாங்கப்படுவது காட்டப்பட்டுள்ளது. இங்கு இரு ஆதாரங்களும் தரையுடன் சம கோணத்தை ஆக்குகின்றன. Bஎன்னும் புள்ளியிலிருந்து Cயானது 1.5m கீழே காணப்படுகிறது.


(i) கம்பம் AB யின் உயரத்தைக் காண்பதற்குப் பொருத்தமான இரு திரிகோண கணித தொடர்புகளை எழுதுக.

(ii) இதிலிருந்து ABயின் உயரத்தைக் காண்க.

(iii) ஆதாரம் நிலத்துடன் ஆக்கும் கோணம் θ யாது?







யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் நடத்திய சர்வதேச மாற்று வலுவுள்ளோர் தின நிகழ்வுகள் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரமுகர்கள் அமர்ந்திருப்பதையும் ஐ.சி. ஆர்.சி.நிறுவன அவயவ நிபுணர் எல். பீரிப்ஸ்,நிகழ்வின் தலைவரும் யாழ். ஜெய்ப்பூர் நிறுவன நிர்வாக செயலாளருமான நா. சிவநாதன் ஆகியோர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.(படங்கள்:எஸ்.கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மக்கள் வங்கியின் 49 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலைக்கு 2குளிர்சாதனப் பெட்டிகள், காற்றாடிகள், இருக்கைகள் வழங்கும் நிகழ்வில் வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத் தலைவரும் முன்னாள் அதிபருமான நாகேந்திரராஜா உரையாற்றுவதையும் குளிர்சாதனப் பெட்டிகளை மக்கள் வங்கி மாவட்ட முகாமையாளர் சி.பத்மநாதன் வைத்திய அதிகாரி க.தயாளனிடம் கையளிப்பதையும் கிளைமுகாமையாளர் க.சண்முகலிங்கம் அருகில் நிற்பதையும் கலந்துகொண்ட உத்தியோகத்தர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-சாவகச்சேரி செய்தியாளர்)

# துணையிழந்தவர்கள் சங்கம் அல்வாயில் அங்குரார்ப்பணம்

(கொழும்புத்துறை)

அல்வாயிலுள்ள சனசமூக நிலையங்களை ஒன்றிணைத்து துணை இழந்தவர்கள் சங்கம் ஒன்றை கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தினர் அமைத்துள்ளனர்.

அதற்கமைய மேற்படி சங்கத்தினரால் துணை இழந்தவர்களின் விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றது.

அத்துடன் அவர்களுக்கான சிறு சேமிப்பு திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சேமிப்பில் ஈடுபடும் பயனாளிகளுக்கு சிறுதொழில் முயற்சிக்கான உதவிகளை கியூடெக் கரித்தாஸ் நிறுவனம் செய்து வருகிறது. (ஸ்ரீ-3-51)




# ஊர்காவற்றுறை சிறிய புஸ்பம் மகளிர் வித்தியாலயம் தேசிய மட்டத்துக்கு தெரிவு

(கொழும்புத்துறை)

மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு உயர்தர மாணவர்களுக்கான வினாடி வினாப் போட்டியை சகல மாவட்டங்களிலுமுள்ள பாடசாலை மாணவர்களுக்கு கரித்தாஸ் கியூடெக் நிறுவனம் நடத்தியிருந்தது.

அந்தவகையில் யாழ். மாவட்ட கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தினர் தீவகம், இளவாலை, தெல்லிப்பளை, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் வினாடி வினாப் போட்டியை நடத்தியிருந்தனர். இதில் ஊர்காவற்துறை சிறிய புஸ்பம் மகளிர் வித்தியாலய தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது.

எதிர்வரும் 7 ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் ஏனைய மாவட்டங்களுடனான வினாடி வினாப் போட்டியில் ஊர்காவற்துறை சிறிய புஸ்பம் மகளிர் உயர்தர மாணவர்கள் பங்குபற்ற உள்ளதாக யாழ்.மாவட்ட கியூடெக் கரித்தாஸ் நிறுவன மனித உரிமைகள் இணைப்பாளர் செ.ஜோசப்பாலா தெரிவித்தார். (ஸ்ரீ-3-51)

# வெள்ளத்தால் அள்ளிச் செல்லப்படும் மணலை சேகரித்து விற்கும் நபர்கள்

(கொழும்புத்துறை)

அல்வாய் கிராமத்தில் உள்ள உள் ஒழுங்கைகளில் வெள்ளத்தால் இழுத்து வரப்படும் மணல்களை சிலர் சேகரித்து விற்பனை செய்து வருகின்றனர்.

இதனால் வீதிகள் வாய்க்கால்களாக மாறிக் காணப்படுவதுடன் பாதசாரிகள் நடமாட முடியாத அளவுக்கு வெள்ளம் தேங்கி நிற்கின்றது.

அல்வாய் மகாத்மா சனசமூக நிலையம், இளங்கோ சனசமூக நிலையம், நக்கீரன் சனசமூக நிலையம் ஆகிய பகுதிகளிலேயே வீதியில் உள்ள மணல்களை சிலர் அள்ளி வாகனத்தில் ஏற்றிச் செல்வதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-3-51)

# சதாவதானி கதிரவேற்பிள்ளையின் 103ஆவது ஆண்டு நினைவு விழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை புலோலி மேற்கில் சதாவதானி நா.கதிரவேற்பிள்ளை அவர்களின் 103ஆவது ஆண்டு நினைவு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சதாவதானி அரங்கில் நிலையத் தலைவர் கி.குகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலை உள வைத்தியர் டாக்டர் முல்லை பரமேஸ்வரன் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக வேலாயுதம் மகாவித்தியாலய முன்னாள் அதிபர் ஆ.ஜெகநாதன், கரவெட்டிப் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் செல்வி சே. செல்வசுகுணா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இவ்விழாவில் யாழ்.புதிய உயர் கல்லூரி விரிவுரையாளர் பண்டிதர் பொன்.சுகந்தன் " தமிழும் சதாவதானியும்" என்னும் பொருளில் சிறப்புச் சொற்பொழி ஆற்றவுள்ளார். (ஸ்ரீ-3-10)

# புகையூட்டல் மூலம் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கை

(கொழும்புத்துறை)

டெங்கு நோயாளர்கள் பலர் இனம் காணப்பட்ட குருநகர் மவுண் கார்மேல் வீதிப் பகுதி மற்றும் குருநகரின் ஏனைய இனங் காணப்பட்ட பகுதிகளில் யாழ்.மாநகர சபை சுகாதாரப் பிரிவினர் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் நேற்று முன்தினம் தொடக்கம் ஈடுபட்டு வருகின்றனர்.

புகையூட்டல் மூலம் நுளம்பைக் கட்டுப்படுத்தும் செயற்றிட்டங்கள் மக்கள் நெரிசல்களாக வாழும் குருநகர் பகுதியில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குருநகர்ப் பகுதியில் பாடசாலை மாணவர் ஒருவர் அண்மையில் டெங்கு நோயினால் இறந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3-51)

# தொடர் மழை காரணமாக குடியிருப்புகளுக்குள் வெள்ளம்

## ஜே/363 பிரிவு மக்கள் பெரும் அசௌகரியம்

(கரவெட்டி)

கரவெட்டி பிரதேசத்தின் ஜே/363 கிராம சேவையாளர் பிரிவில் உள்ள கிராமங்களான இராஜகிராமம், கன்பொல்ல, பிராமணன் தோட்டம், கௌதோட ஆகிய கிராமங்கள் வெள்ள நீரினால் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து பெய்துவரும் பருவகால மழையினால் குடியிருப்புகளுக்குள் வெள்ள நீர் தேங்கி நிற்பதால் இக் கிராம மக்களின் அன்றா வாழ்க்கை பாதிப்படைந்தது.

இம் மக்கள் கூலித் தொழிலையே நம்பியே வாழ்ந்து வரும் நிலையில் வாழ்வாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளனர்.

தொடர்ந்து பெய்து வரும் மழையினால் இவர்கள் தமது இருப்பிடங்களை விட்டு அருகில் உள்ள இராஜகிராம சனசமூக நிலையத்திலும் பொது மண்டபங்களிலும் தங்கி இருந்து விட்டு வீடு செல்வதை காணக்கூடியதாக உள்ளது. எனவே, உரிய தரப்பினர் இம் மக்களின் கஷ்டங்களை உணர்ந்து புரிந்துணர்வுடன் செயற்பட முன்வர வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (ஸ்ரீ-3-24)

# சாவகச்சேரி நகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

(சாவகச்சேரி)

மழைகாலம் ஆரம்பித்துள்ளதால் டெங்குநோய் தீவிரமாக பரவும் வாய்ப்புள்ளதால் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு சாவகச்சேரி நகர சபையினர் தமது எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களினதும் முன்பள்ளிகளினதும் ஒத்துழைப்பினை வேண்டியுள்ளனர்.

தமது சுற்றுப்புறங்களில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படியும் அதில் சேகரிக்கப்படும் திண்மக் கழிவுகளை அகற்ற வேண்டி இருப்பின் அதுபற்றி நகரசபைக்கு அறிவிக்கும் பட்சத்தில் உழவு இயந்திரம் மூலம் அகற்றித்தர ஏற்பாடு செய்யப்படும் என்றும் சனசமூக நிலையங்கள் மற்றும் முன்பள்ளிகளின் நிர்வாகத்தினருக்கும் பொதுமக்களுக்கும் அறியத் தருவதாக நகரசபைச் செயலாளர் செல்வி வி.சிவக்கொழுந்து அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-29)

# பெண்களுக்கெதிரான வன்முறைகள் ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு வீதி நாடகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சமூக செயற்பாட்டு மையமானது பால், பால்நிலை அடிப்படையிலான செயற்பாடுகளை பிரதேச செயலக ரீதியாக மேற்கொண்டு வருகின்றது. தற்போது பெண்களுக்கெதிரான வன்முறைகளானது பல காரணங்களாலும் அதிகரித்து வருவதனை அவதானிக்க முடிகின்றது.

அந்த வகையில் இந் நிறுவனமானது பெண்களிற்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரத்தினை முன்னொட்டி கார்த்திகை 25 ஆம் திகதிமுதல் மார்கழி 10 ஆம் திகதி வரை வீதி நாடகத்தினூடான பிரசாரம் ஏழு பிரதேச செயலகத்தினைச் சேர்ந்த 15 கிராம அலுவலர் பிரிவுகளில் நடாத்துவதற்கு திட்டமிட்டுள்ளது. இவ்வீதி நாடகத்தில் பணிக்கள கிராமங்களைச் சேர்ந்த பயனாளிகளே பங்கேற்கின்றனர். அத்துடன் இந் நாடகத்தினைத் தொடர்ந்து பெண்களின் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு குறித்த பல செயற்பாடுகளும் அக்கிராமங்களில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இதில் இன்று சனிக்கிழமை சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் உள்ள ஜே/335 பிரிவு, மிருசுவில் வடக்கு வன்னியர் கோவிலடியில் முற்பகல் 10 மணிக்கும், ஜே/219 பிரிவு மீசாலை கிழக்கு பொது மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கும், ஜே/305 கல்வயலில் பிற்பகல் 4 மணிக்கும் நடைபெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4)

# வடமராட்சி கிழக்கில் யுத்தத்தால் சேதமடைந்த மூன்று அரசாங்க கட்டடங்கள் புனரமைப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கில் யுத்தத்தினால் சேதமடைந்த மூன்று அரசாங்க கட்டடங்கள் அடுத்த வருட முற்பகுதியில் பல மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளன.

தாழையடியில் தபாலகமும், மருதங்கேணியில் பிரதேச செயலக அலுவலகமும், மிருக வைத்திய அலுவலகம் என்பனவும் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு இதற்கான நிதியை ஒதுக்கியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையின் இறுதிக்காலம் முழுவதும் நமக்கு வேண்டியது நம்பிக்கை! நம்பிக்கை மட்டுமே.
~ டாக்டர் ராபர்ட் ஹெச்.

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# இலங்கையின் எதிர்காலம் எவ்வாறு அமையும்?

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரிட்டனுக்குச் சென்ற வேளை அங்கு தமிழ் மக்கள் திரண்டு நடத்திய ஆர்ப்பாட்டம் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது.

வன்னியில் நடந்த யுத்தத்தின் பின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரிட்டனுக்குச் சென்றவேளை, அங்கு கூடிய புலம்பெயர் தமிழ் மக்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்குப் பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்தியதென்பதில் ஐயமில்லை.

அதேநேரம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ லண்டனில் நின்ற வேளை, வன்னி யுத்தத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் யுத்தக்குற்றச் செயல்களை சனல்–4 தொலைக்காட்சி வெளியிட்டமை ஜனாதிபதிக்கு பாரிய நெருக்கடியைக் கொடுத்திருக்கும் என்பதிலும் மறுகருத்திற்கு இடமில்லை.

ஜனாதிபதி நாடுதிரும்பும் வரை இலங்கை அரசின் இதயத்துடிப்பு அதீதமாக இருந்தது. அதன் எதிரொலியாக ஆர்ப்பாட்டங்களும் நடந்தேறின.

எதுவாயினும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று நாடுதிரும்பியுள்ளார்.

ஆனாலும் ஒரு நாட்டின் தலைவர் இன்னொரு நாட்டிற்கு சென்ற வேளை, அந்த நாட்டில் அவரைக் கைது செய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்பது சர்வதேச சட்டங்கள் எத்துணை தூரம் வலிமையாக உள்ளன என்பதை உலக மக்களுக்கு உணர்த்தியுள்ளது.

இதிலிருந்து எவரும் இலகுவாக எடுக்கக்கூடிய முடிவு, உலகோடு ஒத்திசையப் பழகிக்கொள்ள வேண்டும் என்பதாகும்.

ஒரு நாட்டின் தலைவர் என்பதற்காக சட்டத்தில் விசேட சலுகை கிடையாது என்ற உண்மை உணரப்படுகின்ற போது, சர்வதேசத்தினுடனான உறவை வலுப்படுத்துவதிலேயே நாட்டின் தலைவர்கள் ஈடுபட வேண்டும்.

அவ்வாறானதோர் முடிவை இலங்கை அரசு எடுக்குமாக இருந்தால், இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைத்து தமிழ் மக்களின் மனங்களை வெல்லும் திட்டத்தை முன்னெடுக்கவேண்டும்.

எனினும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அத்தகையதொரு முடிவை எடுப்பாரா என்பதை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

அதேசமயம் சர்வதேச சமூகம் இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் மிகவும் கவனத்தோடு இருப்பதையும் மேற்போந்த நிகழ்வு நிரூபிக்கின்றது.

வன்னி யுத்தத்தின் கொடூரமான நிகழ்வுகள் வெளிவரும் வேகம், மற்றும் இலங்கை அரச தலைமை மீது அமெரிக்கா கொண்டுள்ள நிலைப்பாடு என்பன இலங்கையின் எதிர்கால ஆரோக்கியத்திற்கு சவாலாகவே அமையும்.

எதுவாயினும் இத்தகைய நிலைமைகளை இலங்கை அரசு எவ்வாறு கையாள்கின்றது என்பதை பொறுத்தே எதுவும் நடக்கும்.

# லசந்த படுகொலை விசாரணைகள் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவிடம்

(கொழும்பு)

சண்டே லீடர் பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலைச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை காலமும் லசந்த படுகொலை தொடர்பான விசாரணைகளை பயங்கரவாத தடுப்புப் பிரிவினரும், குற்ற விசாரணைப் பிரிவினரும் இணைந்து மேற்கொண்டு வந்தனர்.

எனினும் எதிர்வரும் காலங்களில் லசந்த படுகொலைச் சம்பவம் குறித்த விசாரணைகளை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் மேற்கொள்வார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச் சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட முன்னாள் இராணுவப் புலனாய்வுப் பிரிவு உறுப்பினரும் நுவரேலிய பிரதேச வாகனத் திருத்துமிட உரிமையாளரும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த இருவரையும் எதிர்வரும் ஜனவரி 17 ஆம் திகதிவரையில் விளக்கமறியலில் வைக்குமாறு கல்கிசை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

லசந்த விக்கிரம துங்க அத்திட்டிய பிரதேசத்தில் வைத்து இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச–5)

# நிரந்தர சமாதானத்தை கட்டியெழுப்ப நடவடிக்கை

## சி.ஆர்.டி.சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

முப்பது வருடங்களாகத் தொடர்ந்த அனர்த்தம் முடிபடைந்துள்ளதால் மீண்டும் அவ்வாறான நிலைமை ஏற்படாத வண்ணம் நிரந்தர சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கான தேவையான யோசனைகள் அடங்கிய அறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதாக கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும்நல்லிணக்க ஆணைக்குழுவின் தலைவர் சி.ஆர்.டி.சில்வா தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். ஏற்கெனவே இடைக்கால அறிக்கையொன்றை அரசாங்கத்திடம் கையளித்துள்ளதாகவும் சகல இன மக்களினதும் பிரச்சினைகள் மற்றும் கருத்துக்களை செவிமடுத்து அவற்றைப் புரிந்துகொண்டு ஆணைக்குழு தனது இறுதி யோசனையை அரசாங்கத்திடம் கையளிக்கும் எனவும் சில்வா குறிப்பிட்டுள்ளார். (ச–5)

# வீதியை தற்காலிகமாக மூடுவதற்கான அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.–பருத்தித்துறை வீதியின் விஸ்தரிப்பு பணிகளுக்காக நெல்லியடி சந்தியிலிருந்து மாலுசந்தி வரையான யாழ்.–பருத்தித்துறை வீதியை (ஏபி-20) எதிர்வரும் 8 ஆம் திகதியிலிருந்து மறு அறிவித்தல் வரை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே எதிர்வரும் 8 ஆம் திகதியிலிருந்து சகல விதமான வாகனங்களும் பொது மக்களும் மறு அறிவித்தல் வரை மாற்றுப் பாதையாக வதிரி சந்தி வரை பயணம் செய்து பின் மாலு சந்தியை அடையுமாறு யாழ். வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் வி.சுதாகர் அறிவித்துள்ளா.(ஸ்ரீ–4)

# சட்டவியல் கற்கைக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தில் சட்டவியல்கற்கை நெறிக்கு (L.L.B) விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் க.பொ.த (உயர்தர) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். தெரிவுப் பரீட்சை மூலம் இக் கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்படுவார்கள். விண்ணப்பப் படிவங்களை நாளை 05 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் பெற்று விண்ணப்பிக்கலாம் என இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ச)

# நல்லிணக்கக் குழுவிற்கு 18 மில்லியன் ரூபாய்

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிற்காக இதுவரை அரசாங்கம் 18 மில்லியன் ரூபாய் ஒதுக்கியுள்ளதாக நாடாளுமன்றத்தில் அரசாங்கத் தரப்பு பிரதம கொறடாவான அமைச்சர் தினேஸ் குணவர்த்தன நேற்றுத் தெரிவித்தார்.

தேவையானால் மேலும் நிதி ஒதுக்கவும் அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார். ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.(ச–5)

# கொட்டும் மழையிலும் மக்கள் சாட்சியம்

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வு திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.45 மணி முதல் இடம்பெற்று வருகின்றது.

கொட்டும் மழைக்கு மத்தியில் பொது மக்கள் சாட்சியமளிப்பதற்கு சென்றனர். கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைகள் திருகோணமலை மாவட்டச் செயலகத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகவிருந்தது. எனினும் ஆணைக்குழு உறுப்பினர்கள் வருவதில் காலநிலை சீரின்மையால் ஏற்பட்ட தாமதம் காரணமாக 12.45 மணிக்கே அமர்வு ஆரம்பமானது. (ச–5)

# நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் பிரதியமைச்சர் முரளிதரன் சாட்சியமளிப்பார்

(கொழும்பு)

கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழுவின் முன்னிலையில் மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் எதிர்வரும் 13 ஆம் திகதி கொழும்பில் சாட்சிமளிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அடுத்த வாரம் கொழும்பில் நடைபெறவுள்ள ஆணைக்குழுவின் அமர்வில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுத் தலைவர் இரா.சம்பந்தன் சாட்சியமளிக்கவுள்ளதாகவும் ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்றுவரும் கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழுவின் அமர்வுகளில் அரசியல் வாதிகள், இராஜதந்திரிகள், அரசாங்க அதிகாரிகள், முன்னாள் அரசாங்க அதிகாரிகள், சமய பிரதிநிதிகள், சமூக நிறுவனங்களின் பிரதிநிதிகள் என பலர் சாட்சியமளித்து வருகின்றனர்.

அந்தவகையில் பிரதி மீள்குடியேற்ற அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் எதிர்வரும் 13 ஆம் திகதி சாட்சியமளிக்கவுள்ளதுடன் இரா.சம்பந்தன் அடுத்தவாரம் சாட்சியமளிப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

சம்பந்தனுக்குஆணைக்குழுஅழைப்பு விடுத்துள்ள நிலையில் அவர் விரைவில் சாட்சியமளிப்பார் என்று ஆணைக்குழுவின் அதிகாரி மேலும் குறிப்பிட்டார்.

மேலும் அம்பாறை மாவட்டத்தில் இம்மாதம் நடைபெறவிருந்த ஆணைக்குழுவின் அமர்வுகள் ஜனவரி மாதத்துக்கு பிற்போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ–2)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

உடுவில் மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக கொழும்பு பல்கலைக்கழக பட்டப்படிப்புகள் பீடத்தைச்சேர்ந்தவரும், கொழும்பு ஆய்வு மையத்தின் பெண்கள் கல்விப் பணிப்பாளருமான செல்வி திருச்சந்திரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ–2)

# சுவாமி விவேகானந்தரின்

## எழுமின்! விழிமின்!



எழுமின்! விழிமின்! நமது தாய்த்திருநாடு இம்மகத்தான தியாகத்தை வேண்டி நிற்கிறது. இம்மகத்தான பணி– இளைஞர்களே செய்யக்கூடிய பணி. இளமை, ஆற்றல் , வலிமை ,கட்டுடல் , அறிவுக் கூர்மை உடைய–இவர்களுக்கே இளைஞர்களுக்கே உரியது இப்பணி. நமது நாட்டில் நூற்றுக்கணக்கில், ஆயிரக் கணக்கில் இத்தகைய இளைஞர்கள் இருக்கிறார்கள்.

இளைஞர்களே! எழுமின்! விழிமின்! உலகம் உங்களை இரு கை நீட்டி, அழைக்கிறது. ஊக்கம் உங்கள் இரத்தத்தில் கிளர்ந்தெழ எழுவீர்களாக! ஏழை என்றோ, நண்பர்கள் யாரும் இல்லை என்றோ நினைந்து வருந்த வேண்டாம். அந்தோ! பணமா மனிதனைப் படைக்கிறது? இதுவரை யாரேனும் அப்படிக் கண்டதுண்டா? மனிதனல்லவோ செல்வத்தை ஆக்குகிறான்? இவ்வுலகமனைத்தும் மனித சக்தியினால் உருவாகியிருக்கிறது! ஊக்கவுணர்வினால் உருவாகியிருக்கிறது! நம்பிக்கை எனும் வலிமையினால் உருவாகியிருக்கிறது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமரை அவமதித்துள்ளார் ராசா; உச்சநீதிமன்றம் மீண்டும் கண்டனம்

2ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டில் பிரதமரின் அறிவுரையை உதாசீனப்படுத்தியதோடு அவருக்கு மரியாதைக் குறைவாக கடிதம் எழுதி அவரை அவமதித்துள்ளார் என முன்னாள் தொலைத்தொடர்புத் துறை அமைச்சர் ஆ.ராசா மீது இந்திய உச்ச நீதி மன்றம் மீண்டும் கண்டனம் தெரிவித் துள்ளது.

2ஜி அலைக்கற்றையை ஒதுக்கீடு செய்வதை சில நாட்களுக்கு ஒத்திவைக்குமாறு பிரதமர் மன்மோகன்சிங்,ராசாவுக்கு கடிதம் எழுதியுள்ளார். ஆனால் அந்த கடிதத்தை அவர் உதாசீனப்படுத்திவிட்டார். மேலும் சட்ட அமைச்சகம் தெரிவித்த கருத்து தொடர்பாக பிரதமருக்கு ராசா எழுதிய கடிதத்தில் " நியாய மற்றது. பாரபட்சமானது. தன்னிச்சையானது என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தி உள்ளார்.

உயர் பதவியில் இருக்கும் ஒருவருக்குக் கடிதம் எழுதும்போது இதுபோன்ற வார்த்தைகளையா பயன்படுத்துவது ? இதில் அவரது போக்கு அணுகுமுறை ஏற்றுக் கொள்ளும் படி இல்லை.இந்தக் கடிதம் மூலம் பிரதமரை அவர் அவமதித்துள்ளார் என்று நீதிபதிகள் கண்டனம் தெரிவித்தனர். (ஸ்ரீ-2)

# கருணாநிதி தன்னுடைய சொத்து கணக்கை காட்டியிருப்பது நகைப்புக்குரிய ஒன்றாகும்

## ஜெயலலிதா விமர்சனம்

சிறந்த நகைச்சுவைக்கு நோபல் பரிசு கொடுக்கப்பட்டால் தனது சொத்துக் கணக்கை வெளியிட்ட முதல்வர் கருணா நிதியே அதற்குத் தகுதியானவர் என்று அதிமுக பொதுச் செயலாளர் ஜெயலலிதா விமர்சித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கருணாநிதியிடம் கணக்கு கேட்டு அதைத் தராததன் காரணமாக எம்.ஜி.ஆரால் உருவாக்கப்பட்ட இயக்கம் தான் அதிமுக அதை மறந்து கணக்கு காட்டுகிறேன். கண்ணுடையோர் காண என்ற தலைப்பிலே கருணாநிதி தன்னுடைய கணக்கைக் காட்டியிருப்பது நகைப்புக்குரியதாக இருக்கிறது.

இதை கடந்த நூற்றாண்டு மற்றும் இந்த நூற்றாண்டின் இணையற்ற ஜோக் என்று சொல்லலாம். இப்படிப்பட்ட சிறந்த நகைச் சுவைக்காக மாநில அளவிலோ தேசிய அளவிலோ ஏன் உலக அளவிலோ கூட கருணாநிதிக்கு விருது கிடைத்தால் அதில் ஆச்சரியப் படுவதற்கு ஒன்றுமில்லை.

இந்தியாவிலேயே ஊழலுக்காக கலைக்கப்பட்ட ஒரே ஆட்சி கருணாநிதியின் ஆட்சி. வீராணம் ஊழல்,பூச்சிகொல்லி மருந்து ஊழல், மஸ்டர் ரோல் ஊழல், மணல் கொள்ளை, ரேஷன் பொருட்கள் கடத்தல், கள்ள லாட்டரி சீட்டு விற்பனை என அனைத்திற்கும் மூலக் காரணமானவர் கருணாநிதி. விஞ்ஞான பூர்வமாக ஊழல் செய்வதில் வல்லவர் என்று சர்க்காரியா கமிஷனிடம் சான்றிதழ் பெற்றவர்.

இப்படி இருக்கும் கருணாநிதி இலஞ்சம், ஊழல் ஆகியவற்றைப் பொறுத்தவரை தான் ஒரு நெருப்பு என்று கூறியிருப்பது நகைப் புக்குரியதாக உள்ளது. பஞ்சுப் பொதியிலே தீப்பொறி பட்டால் எப்படி தீப்பிடித்துக் கொள்ளுமோ அது போல தன்னிடம் உள்ள ஊழலை உலகம் முழுவதும் பரப்புவதில் தான் ஒரு நெருப்பு என்ற அர்த்தத்தில் கூறியிருக்கிறார்.

பொருளாதாரம், விஞ்ஞானம், இலக்கியம், சமாதானம் போன்றவற்றிற்காக நோபல் பரிசு கொடுக்கப்படுகிறது. சிறந்த நகைச் சுவைக்கு நோபல் பரிசு கொடுக்கப்பட்டால் அந்தப் பரிசுக்குத் தகுதியானவர் கருணாநிதி தான். அந்த அளவுக்கு கணக்கு காட்டுகிறேன். கண்ணுடையோர் காண என்ற தலைப்பில் வெளிவந்துள்ள கருணாநிதியின் அறிக்கையை படித்து தமிழக மக்கள் விலா எலும்பு வலிக்க சிரித்து உடல் வலி வந்தது தான் மிச்சம்.

தனது 60 ஆண்டுகால பொதுவாழ்வில் ஏழை மக்களை ஏமாற்றி தன் குடும்ப மக்களை ஏற்றிவிட்டிருக்கும் கருணாநிதி ஆட்சி முடியும் தறுவாயில் பொய்க் கணக்கை காட்டி மீண்டும் மக்களை ஏமாற்றப் பார்க்கிறார். கருணாநிதியின் பொய்க் கணக்கிற்கு பலமான பதிலடி கொடுக்க மக்கள் தயாராகிவிட்டார்கள் என்று ஜெயலலிதா கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

# கோபாலபுரம் வீட்டைத் தவிர வேறு சொத்துக்கள் இல்லை

## கருணாநிதி அறிவிப்பு



கோபாலபுரம் வீட்டைத் தவிர வேறு பெரிய வீடுகளையோ, தோட்டங் களையோ, எஸ்டேட்களையோ விலைக்கு வாங்கவில்லை என முதல்வர் கருணாநிதி தனது சொத்துக் கணக்கை அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில்,

ஜெயலலிதாவில் ஆரம்பித்து அ.தி.மு.க. தொண்டர்கள் வரையிலும், சில கட்சிகளின் நண்பர்கள் சிலரும் நான் ஏதோ சல்லிக்காக கூட கையிலே இல்லாமல் சென்னைக்கு வந்ததைப் போலவும், இன்றைக்கு ஆசியாவிலேயே முதலாவது பணக்காரனாக இருப்பதாகவும், என் பெயரில் ஏராளமான சொத்துக்களையும் ஸ்டேட்களையும் வாங்கிக் குவித்திருப்பதைப் போலவும் பேசியும் எழுதியும் வருகிறார்கள்.

நான் சிறு பருவத்திலே இருந்தபோதே, திருடர்கள் வீடு புகுந்து திருட வருகின்ற அளவிற்கும், உயர்நிலைப் பள்ளியில் படிக்கவே திருவாரூரில் கொண்டுபோய் சேர்க்கக் கூடிய அளவிற்கும் ஓரளவு வசதியுள்ள குடும்பம் தான் என்னுடையது.

கடந்த 1949 ஆம் ஆண்டு சேலம் மாடர்ன் தியேட்டரில் எழுத்தாளர் பணியிலே அமர்ந்தேன். அந்தக் காலத்திலேயே மாத ஊதியமாக 500ரூபாய் பெற்றேன்.

என்.எஸ்.கிருஷ்ணன் என்னைச் சந்தித்து அவருடைய மணமகள் திரைப்படத்திற்கு நான் தான் திரைக்கதை வசனம் எழுத வேண்டும் எனக் கேட்டார்.அதற்கு நான் சம்மதித்ததைத் தொடர்ந்து அந்தக்காலத்திலேயே 10ஆயிரம் ரூபாய் ஊதியமாகப் பெற்றேன்.

அது போலவே, இருவர் உள்ளம் திரைப் படத்திற்காக வசம் எழுதியபோது, அந்தப் படம் நூறு நாளைத் தாண்டி ஓடியதால், தயாரிப் பாளர் எஸ்.வி. பிரசாத் என் வீட்டிற்கு வந்து முதலில் கொடுத்த 10 ஆயிரம் ரூபாவைத் தவிர்த்து,மேலும் 10ஆயிரம் ரூபாவை என்னிடம் அளித்தார்.நான் அந்தத் தொகையைக் கொண்டு திருக்குவளையில் என் பெற்றோர் பெயரால் ஒரு தாய்சேய் நல விடுதி கட்டி, அதை அன்றைய முதல்வர் பக்தவசத்சலத்தை அழைத்துச் சென்று திறந்து வைத்தேன்.

அந்தக் காலகட்டத்தில் சென்னை தி. நகரில் ஒரு வாடகை வீட்டில் குடும்பம் நடத்தினேன். அப்போது ஒருநாள், கலைவாணர் என்னிடம் ஒரு பந்தயம் கட்டி, அதிலே 5000 ரூபாய் எனக்கு இலாபம் கிடைத்தது.

அதுகண்டுவியப்பும், மகிழ்ச்சியும் அடைத்த கலைவாணர் அதற்குமேல் தேவையான பணத்தைத் தானே போட்டு, எனக்கு ஒரு கார் வாங்கித் தந்தார். அந்தக் காரில் என்னை உட்கார வைத்து கலைவாணரே ஸ்டூடியோவிற்கு அழைத்துச் சென்றார்.

அன்று தொடங்கி இன்றுவரை சுமார் 75 படங்களுக்கு மேல் நான் திரைக்கதை, வசனம் எழுதி ஊதியம் பெற்றுள்ளேன். பொதுப் பணித்துறை அமைச்சராகவும், ஐந்துமுறை முதல்வராகவும் இருந் திருக்கிறேன். எல்லா முதல்வர்களின் வீடுகளையும் விட வசதி குறைவான எளிமையான வீட்டிலே தான் நான் வாழ்ந்து வருகிறேன் என்பாதை, வெளிநாட்டிலிருந்து வந்த முக்கிய பிரமுகர்களே நேரில் கண்டு வியப்பு தெரிவித் துள்ளனர். இந்த வீடு கூட நான் அமைச் சராவதற்கு முன் 45 ஆயிரம் ரூபாய்க்கு வாங்கிய வீடு தான்.

நான் இத்தனை பொறுப்புக்களை என் 87 வயதிற்குள் பார்த்திருக்கிறேன் என்ற போதிலும், சென்னையில் உள்ள இந்த ஒரு வீட்டைத் தவிர வேறு பெரிய வீடுகளையோ, தோட்டங்களையோ,ஸ்டேட்களையோ, விலைக்கு வாங்கியதும் இல்லை. அரசு நிலங்களை ஆக்கிரமித்துக்கொண்டதும் இல்லை. குறைந்த விலைக்கு பெற்றுக்கொண்டதும் இல்லை.

இறுதியாக தற்போது என் கணக்கில் எவ்வளவு இருப்பு உள்ளது, என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். தற்போது வைப்பு நிதியாக ஐந்துகோடியே 65 இலட்சத்து 93 ஆயிரத்து 134 ரூபாவும்,சேமிப்புக் கணக்கில் 35 இலட்சத்து 90 ஆயிரத்து 86 ஆயிரம் ரூபாவும் இன்றைய திகதியில் உள்ளது.

நான் வசிக்கிற இந்த வீட்டைக் கூட மருத்துவமனை அமைப்பதற்காக எழுதிக் கொடுத்துள்ளேன். இந்தவீட்டைத் தவிர என் பெயரில் நான் எந்தச் சொத்தையும் வாங்கவில்லை. இதை வைத்துத்தான் நான் ஆசியாவிலேயே முதல் கோடீஸ்வரன் என்கிறார்கள் என்று தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)




# நளினியின் விடுதலையை எதிர்த்து காங்கிரஸின் முன்னாள் எம்.பி.வழக்கு

நளினியை முன்கூட்டியே விடுதலை செய்யக்கூடாது என்று கோரி முன்னாள் எம்.பி அன்பரசு தொடர்ந்த வழங்கில் 2 வாரத்திற்குள் பதில் மனுத்தாக்கல் செய்ய வேண்டும் என்று மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தன்னை முன்கூட்டியே விடுதலை செய்ய வேண்டும் என்று ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்று சிறையில் இருக்கும் நளினி வைத்துள்ள கோரிக்கையை எதிர்த்து, காங்கிரஸ் கட்சியின் முன்னாள் எம்.பி.ரா.அன்பரசு சென்னை மேல் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

அவர் தாக்கல் செய்த மனுவில், முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி சாதாரணமாக அல்ல, சர்வதேச அளவில் திட்டமிடப்பட்டு கொடூரமாக கொலைசெய்யப்பட்டார். அவரை கொலை செய்யும் திட்டத்தில் பங்கேற்று, கொலையாளிகளை மறைத்து வைத்த குற்றத்தில் நளினி ஈடுபட்டார். எனவே நளினிக்கு கருணையோ,இரக்கமோ, மனிதாபிமானமோ காட்டினால் அது நீதியைத் தடம் புரளச் செய்துவிடும்.

மற்ற கைதிகளைப்போல் முன்கூட்டியே விடுதலை செய்யப்படுவதற்கும் தண்டனை குறைப்புக்கும் நளினி தகுதிபெற்றவர் இல்லை. கருணையில்லாமல் ஒரு இளம் தலைவர் கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட இவர் உரிமையுடன் தண்டனை குறைப்பை கோர முடியாது.

நளினியை விடுதலை செய்தால் அச்சுறுத்தல்களுக்குள் இருக்கும் ராகுல்காந்தி, பிரியங்கா ஆகியோருக்கும் பாதுகாப்பு இல்லாமல் போய்விடும். ஒருவருக்கு அளிக்கப்படும் விடுதலை மற்றவருக்கு அச்சுறுத்தலாக இருக்கக்கூடாது.

எனவே தன்னை முன்கூட்டியே விடுதலை செய்ய வேண்டும் என்ற நளினியின் கோரிக்கையை கடுமையாக ஆட்சேபிக்கிறேன். இந்த வழக்கில் என்னையும் சேர்த்து விசாரிக்க வேண்டும் என்று கூறியிருந்தார்.நீதிபதி சுதாகர் முன்பு நேற்று முன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. மனுதாரர் சார்பில் மூத்த சட்டத்தரணி காந்தி ஆஜரானார்.

இந்த வழக்கை விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளக்கூடாது என்று நளினியின் சட்டத்தரணி ராதாகிருஷ்ணன் கேட்டுக் கொண்டார். அதைத் தொடர்ந்து இந்த வழக்கில் 2 வாரத்திற்குள் [illegible] படி நீதிபதி உத்தரவிட்டார். (ஸ்ரீ-2)

# 20 மடங்கு அதிக நட்சத்திரங்கள் வான்வெளியில் கண்டுபிடிப்பு

விண்வெளியில் நட்சத்திரங்களின் எண்ணிக்கை விஞ்ஞானிகளால் முன்பு கணிக்கப்பட்டதை விட 20 மடங்கு அதிகம் இருப்பது தெரியவந்துள்ளது.

விண்வெளியில் 10,000 கோடி முதல் ஒரு இலட்சம் கோடி வரை நட்சத்திரங்கள் இருக்கலாம் என்பது விஞ்ஞானிகளின் கணிப்பாக இருந்தது. அமெரிக்காவின் கார்னெல் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் இதைத் தெரிவித்திருந்தனர்.

ஆனால், யேல்பல்கலைக்கழக விண்வெளி ஆராய்ச்சியாளர் பீட்டர்வான் டோக்கும் தலைமையில் ஹார்வேர்டு பல்கலைக்கழக விஞ்ஞானி சார்லி கான்ராய் இணைந்து நட்சத்திர கூட்டங்கள் பற்றி விரிவாக ஆராய்ச்சி மேற்கொண்டனர். பால்வெளி பாதையில் நட்சத்திர கூட்டங்களை அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி அமைப்பான நாசா படம் எடுத்து 2006 இல் வெளியிட்டிருந்தது. அதன் அடிப் படையில் பிரகாசமான நட்சத்திரங்கள் எண்ணிக்கையை வைத்து நட்சத்திர தொகுப்புக் களை பீட்டர் தலைமையிலான குழு ஆராய்ந் தது.

விண்வெளியில் 10,000கோடி முதல் ஒரு இலட்சம் கோடி வரை நட்சத்திரங்கள் இருக்கலாம் என்ற கணக்கை அது தவிடு பொடியாக்கியது.



அந்த எண்ணிகையை விட 10 முதல 20 மடங்கு அதிக நட்சத்திரங்கள் இருப்பது ஆராய்ச்சியில் தெரியவந்தது.

அதாவது, 3 க்கு அடுத்து 23 பூச்சியங்களை சேர்த்தால் வரக்கூடிய எண்ணிக்கையில் நட்சத்திரங்கள் விண்வெளியில் உலவிக்கொண்டிருப்பதாக பீட்டர் தெரிவித்துள்ளார். இதை ஆங்கிலத்தில் மில்லியன் ,பில்லியன்,திரில்லியன் என்பதைப் போல 300 செக்ஸ்டிலியன் என்று கூறுகின்றனர்.அதாவது 10,000 கோடியில் 3இலட்சம் மடங்குகள் செக்ஸ்டிலியன் என்று அழைக்கப்படுகிறது. (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்டர்சன் வேகத்தில் அவுஸ்திரேலியா சுருண்டது

(அடிலெயிட்)

அன்டர்சனின் துல்லியமான பந்துவீச்சில் சிக்கி அவுஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் 245 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

அவுஸ்திரேலியா-இங்கிலாந்து அணிகள் மோதும் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆஸஷ் டெஸ்ட் தொடர் அவுஸ்திரேலியாவில் நடைபெறுகின்றது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத் தொடரின் முதலாவது டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிபடைந்த நிலையில் இரண்டாவது போட்டி நேற்று அடிலெயிட்டில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப் பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணிக்கு ஆரம்பத்திலேயே அடி விழுந்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஹட்ரிச் பூச்சியத்துடன் ரண் அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய அணித் தலைவர் ரிக்கி பொன்டிங்கை பூச்சியத்துடன் முதலாவது பந்திலேயே வெளியேற்றினார்.

தொடர்ந்து வந்த மைக்கல் கிளார்க் 02 ஓட்டங்களுடன் அன்டர்சனின் பந்துவீச்சில் ஆட்டமிழக்க அவுஸ்திரேலிய அணி 02 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 03 விக்கெட்டுக்களைப் பறிகொடுத்துத் திணறியது.

இந்நிலையில் நான்காவது விக்கெட்டுக்காக வோட்சனுடன் இணைந்த ஹசி பொறுப்பாக ஆடி அவுஸ்திரேலிய அணியை சரிவிலிருந்து மீட்டனர்.

இதில் ஆரம்பத் துடுப்பாட்டவீரர் வோட்சன் 82 பந்துகளில் அரைச்சதம் கடந்தார்.

இந்த ஜோடி நாலாவது விக்கெட்டுக்காக 96 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்தபோது சேன் வோட்ஷன் 94 பந்துகளில் (07 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 51 ஓட்டங்களை எடுத்து அன்டர்சனின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

அடுத்து நோத் களமிறங்க மறுமுனையில் மைக்கல் ஹசி 95 பந்துகளில் அரைச்சதத்தை எட்டினார்.


இதில் மார்க்கஸ் நோத் 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து ஹடின் களமிறங்கி சிறப்பாகத் துடுப்பெடுத்தாட அவுஸ்திரேலிய அணி 200 ஓட்டங்களைத் தாண்டியது.

இதில் மைக்கல் ஹசி 183 பந்துகளில் (08 பவுண்டரிகள் உட்பட) 93 ஓட்டங்களை எடுத்து சுவானின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த ஹரிஸ் முதலாவது பந்திலேயே பூச்சியத்துடன் வெளியேற அவுஸ்திரேலிய அணி 207 ஓட்டங்களுடன் 07வது விக்கெட்டையிழந்தது.

இறுதியில் ஹடின் அரைச்சதம் பெற அவுஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் 245 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.




இதில் பிரட் ஹடின் 95 பந்துகளில் (03 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 56 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் ஜேம்ஸ் அன்டர்சன் 04 விக்கெட்டுக்களையும், சுவான் 02 விக்கெட்டுக்களையும், பிரோட், பின் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும்வீழ்த்தினர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி நேற்றைய முதல் நாள் ஆட்டநேர முடிவில் விக்கெட்டிழப்பின்றி ஒரு ஓட்டத்தை எடுத்தது.

இப் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# அப்துர் ரஷாக் அபாரம் பங்களாதேஷ் பதிலடி



(மீர்பூர்)

அப்துர் ராஷாக், சகீப் அல் ஹஷனின் சிறப்பான பந்துவீச்சின் மூலம் பங்களாதேஷ் அணி 06 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் சிம்பாவே அணியை வீழ்த்தி தொடரை சமநிலையாக்கியது.

பங்களாதேஷிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள சிம்பாவே அணி ஐந்து போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகின்றது.

இதில் முதலாவது ஒருநாள் போட்டியில் சிம்பாவே அணி வெற்றிபெற்று தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ள நிலையில் இரண்டாவது போட்டி நேற்று மீர்பூரில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணித்தலைவர் சகீப் அல் ஹஷன் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி 46.2 ஓவர்களில்சகல விக்கெட்டுக்களையுமிழந்து 191 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஏர்வின் ஆட்டமிழக்காமல் 42 ஓட்டங்களையும், உற்சயா 32, டொபெக்வா 30, ரெய்லர் 28 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அப்துர் ரஷாக் 05 விக்கெட்டுக்களையும், அணித் தலைவர் சகீப் அல் ஹஷன் 04 விக்கெட்டுக்களையும், இஸ்லாம் 01 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 192 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி ரகிபுல் ஹஷனின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் 39.4 ஓவர்களில் 04 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 194 ஓட்டங்களை எடுத்து 06 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் ரகிபுல் ஹஷன் 65 ஓட்டங்களையும், சிட்டிக் 53, தமீம் இக்பால் 44 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பிரைஸ் 02 விக்கெட்டுக்களையும் மோபு, டொபெக்வா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப் போட்டியில் பங்களாதேஷ் அணியின் வெற்றிக்கு வழிசமைத்த அப்துர் ரஷாக் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் பங்களாதேஷ் அணி ஐந்து போட்டிகள் கொண்ட தொடர் 1:1 என்ற கணக்கில் சமநிலையிலுள்ளது.

# ஜயலத் ஜயவர்த்தன எம்.பியை குற்றம் சாட்டுவது தவறாகும்

## மனோ கணேசன் அறிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த லண்டன் சென்று விமான நிலையத்தில் இறங்கிய தினமான டிசெம்பர் மாதம் 29 ஆம் திகதி லண்டனில் இருந்திராத ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தனவை குற்றம் சுமத்துவது ஏற்றுக் கொள்ள முடியாது என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் அப்பட்டமான உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி அரசியல் நடத்துவது இன்றைய அரசாங்கத்திற்கு கைவந்த கலை என அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது,

ஜயலத் எம்.பி லண்டன் ஹீத்ரு விமான நிலையத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் நேரடியாக கலந்துகொண்டார் என்ற குற்றச்சாட்டை முன்வைத்து அமைச்சரும் அரசாங்க தரப்பு பிரதம கொறடாவுமான தினேஸ் குணவர்த்தன கூச்சலிட்டு உரையாற்றியதை முழு நாடுமே ஊடகங்கள் மூலமாக பார்க்கவும் படிக்கவும் நேர்ந்துள்ளது. ஜயலத் எம்.பி. லண்டனில் இருந்து எப்போது வெளியேறினார் உட்பட அனைத்துத் தகவல்களும் அவரது கட்வுச் சீட்டில் பதிவாகியுள்ளன. இந்த தகவல்களை கவனத்தில் எடுக்கும் எந்தவொரு புத்தியுள்ள மனிதரும் இந்தக் குற்றச்சாட்டுக்கள் சோடிக்கப்பட்ட போலிக் குற்றச்சாட்டுக்கள் என்பதை அறிந்துகொள்ள முடியும். இத்தகைய குற்றச்சாட்டுக்கள் தமது அரசியலுடன் முரண்பட்டவர்கள் மீது சுமத்துவது இன்றைய அரசாங்க அரசியல் வாதிகளுக்கு கைவந்த கலையாகும். கடந்த காலங்களில் இத்தகைய குற்றச் சாட்டுக்கள் என்மீது எந்த அடிப்படையும் இல்லாமல் சுமத்தப்பட்டன.

நான் கிளிநொச்சிக்கு சென்று புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் நீச்சல் தடாகத்தில் நீச்சலடித்து குளித்ததாக அமைச்சர் விமல்வீரவன்ச கடந்த தேர்தல் காலத்தில் மேடைதோறும் சொல்லித்திரிந்தார். இது தொடர்பான வீடியோ ஒளி நாடா தன்னிடம் இருப்பதாகவும் அவர் சொன்னார். இது அப்பட்டமான சோடிக்கப்பட்ட பொய் கதையாகும். அந்த ஒளிநாடாவை ஒளிபரப்பும்படி பாராளுமன்றத்தில் அமைச்சர் விமல் வீரவன்சவிடம் கோரியிருந்தேன். இதை அவர் ஒளிபரப்பினால் அரசியலில் இருந்து விலகுவதாகக் கூறியிருந்தேன். ஆனால் அது ஒருபோதும் ஒளிபரப்பப்படவில்லை. ஏனெனில் அப்படி ஒரு சம்பவம் நடைபெறவே இல்லை. இது தொடர்பாக அன்று இதே அமைச்சர் தினேஸ் குணவர்த்தன அரசியலில் இத்தகைய குற்றச்சாட்டுகள் சகஜமானவை எனவே இவற்றைக் கணக்கில் எடுக்க வேண்டாம் என என்னை சமாதானப்படுத்தினார்.

தனிநாடு கோரியவர்களின் மேடையில் ஏறி ஒரே நாட்டைப்பற்றி பேசியதற்கு இலங்கை அரசாங்கம் எனக்கு விருது கொடுத்திருக்க வேண்டும். ஆனால் அரசாங்கத்தின் பங்காளியாக நானும் எங்கள் கட்சியும் இல்லை என்ற காரணத்தினாலேயே என் மீது திட்டமிட்டு இத்தகைய குற்றச் சாட்டுக்களை சுமத்தினார்கள்.

நண்பர் ஜயலத் ஜயவர்த்தன எம்.பி. ஐக்கிய தேசியக் கட்சிக்கு அப்பாற்பட்ட நிலையில் நின்று தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்து வருபவர். அவர் மீது தாக்குதல் நடத்தி, காயப்படுத்தும் பொழுது அதற்கு எதிராக கண்டனத்தை தெரிவிக்கவேண்டியது ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் என்ற முறையிலும், தனிப்பிட்ட முறையிலும் எமது கடமையாகும் என மனோ கணேசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# போதையில் திரிந்த நால்வருக்கு சிறை

சாவகச் சேரிப் பகுதியில் போதையில் பொது மக்களுக்கு இடையூறு விளைவித்தார்கள் என்ற குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்ட நால்வருக்கு சாவகச்சேரி நீதவான் நீதிமன்றின் நீதிபதி என்.எம்.எம்.அப்துல்லாஹ் 15 நாள் கடூழியச் சிறைத் தண்டனையும், ஆயிரத்து 500 ரூபாய் தண்டப்பணமும் விதித்து நேற்று தீர்ப்பளித்தார்.

சாவகச் சேரி பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட மேற்படி வழக்கில் ஆஜர்ப்படுத்தப்பட்ட குற்றவாளிகள் தண்டப் பணத்தினைக் கட்டத் தவறினால் மேலும் ஒருமாதகாலம் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் தீர்ப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-1)

# மட்டு. அதிரடிப்படையினரின் முகாம் மூடப்பட்டது

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் முதன் முதலாக தமிழீழ விடுதலைப்புலிகளினால் மிகப் பெரும் தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்ட படை முகாமான மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு விசேட அதிரடிப்படை முகாமிலிருந்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை படையினர் வெளியேறிச் சென்றுள்ளனர். கடந்த 30 வருடமாக விசேட அதிரடிப் படையினர் முகாமமைத்திருந்த காணி நேற்று முன்தினம் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

1990 ஆம் ஆண்டு ரங்கன் என்ற தற்கொலைதாரியினால் குண்டு நிரப்பப்பட்ட வான் குறித்த முகாம் மீது மோதப்பட்டு தற்கொலைத்தாக்குதல் நடத்தப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து விடுதலைப்புலிகள் குறித்த முகாம் மீது தாக்குதல் நடத்தினர்.

மட்டக்களப்பு- கல்முனை பிரதான வீதியில் அமைக்கப்பட்டிருந்த முகாமிற்குரிய காணிச் சொந்தக்காரரும் தாக்குதல் ஒன்றுக்கு உதவியதாக படையினரால் தேடப்பட்டு வந்த நிலையில் இடம்பெயர்ந்து வெளிநாடொன்றில் வாழ்ந்து வருகின்றார்.

இந்நிலையில் புதுக்குடியிருப்பு விசேட அதிரடிப்படை முகாமிலிருந்து வெளியேறிச் செல்லும் விசேட அதிரடிப்படையினர் குருநாகல் பகுதியில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் விசேட அதிரடிப் படையினரின் முகாம் மூடப்பட்டு அப் பகுதியில் கடமையிலிருந்த படையினர் வேறு பகுதிகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர். (ச-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதிக்கு எதுவும் நடந்திருப்பின் ஆசியா முழுவதுமே பொங்கியிருக்கும்

## மேல் மாகாண ஆளுநர் தெரிவிப்பு

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக லண்டனில் ஏதாவது நடந்திருப்பின் இலங்கை மட்டுமல்ல ஆசியா முழுவதுமே பொங்கி எழுந்திருக்குமென தொழிற்சங்க சம்மேளனத்தின் ஏற்பாட்டாளரும், மேல் மாகாண ஆளுநருமான அலவி மௌலானா தெரிவித்தார்.

பிரிட்டனுக்கு எதிராக கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்னால் இடம்பெற்ற கண்டனப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக்கூறினார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைப் பாதுகாப்பதற்காக இலட்சக் கணக்கான மக்கள் வீதியில் இறங்க தயாராக உள்ளனர். ஜனாதிபதிக்கு எதிராக ஏதாவது நடந்திருந்தால், இலங்கை மட்டுமல்ல முழு ஆசியாவும் பொங்கியெழும் என அலவி மௌலானா கூறினார். (ச-5)

## மரண அறிவித்தல்

### வேலாயுதபிள்ளை தங்கம்மா

இருபாலை முனி கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதபிள்ளை தங்கம்மா 03.12.2010 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து சிந்தாமணி தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற வேலாயுதபிள்ளையின் மனைவியும் சூரியகுமார், இந்திரகுமார், வசந்தமாலா ஆகியோரின் பாசமிகு தாயாரும், குணரத்தினம், கோசலாதேவி, விஜி ஆகியோரின் மாமியாரும் ஜெசிந்தன், சோபிகா, சரவணபவன், சுபேந்திரன் ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான நடராசா, செல்வராசா மற்றும் இராசரத்தினம், இராசதுரை, மீனாட்சியம்மா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.12.2010 இன்று (சனிக்கிழமை) மதியம் 12 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேணியடி லேன்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்:
ஜெசிந்தன்

(3175)

## போர்குற்ற விசாரணைகளை...

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ லண்டனுக்கு விஜயம் செய்திருந்த நிலையில் பிரித்தானியா இக் கோரிக்கையை முன்வைத்துள்ளமை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பெரும் நெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ளது.

பிரித்தானியாவுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒக்ஸ்போர்ட் ஒன்றியத்தில் ஆற்றவிருந்த உரை பிரித்தானிய வாழ் தமிழ்மக்களின் பாரிய எதிர்ப்புப் போராட்டங்களின் காரணமாக ரத்து செய்யப்பட்டது.

இந் நிலையில் இலங்கையில் கடந்த வருடம் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது இரு தரப்பினரும் மேற்கொண்டதாகக் கூறப்படும் சர்வதேச போர் நியமங்களுக்கு எதிராக குற்றச்சம்பவங்கள் தொடர்பான சுதந்திரமான நம்பகத்தம்மை கொண்ட விசாரணையை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டியது அவசியமானதென பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் குரல்தர வல்ல அதிகாரி தெரிவித்துள்ளார்.

வன்னியில் கடந்தவருடம் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலை நடவடிக்கையில் 80ஆயிரம் முதல் ஒரு இலட்சம் வரையிலான தமிழ் மக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என ஐக்கிய நாடுகள் சபை கணக்கிடுகின்றது.

வன்னிப் போரின் போது இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து சுதந்திரமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என சர்வதேசரீதியில் அழுத்தங்கள் அதிகரித்து வருகின்றது.

இந் நிலையில் பிரித்தானியாவின் பாதுகாப்பு அமைச்சர் லியம் பொக்கிஸிற்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்புத் தொடர்பான முழுமையான அறிக்கை வெளியிடப்பட வேண்டும் என அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுவின் அங்கத்தவரும் தொழிற்கட்சி நாடாளுமன்ற உறுப்பினருமான கீத்வாஸ் நாடாளுமன்றத்தில் கூறியுள்ளார்.

அதேவேளை எதிர்வரும் 14ஆம் திகதி இடம்பெறவுள்ள பிரித்தானிய நாடாளுமன்ற அமர்வின் வெளிவிவகார அமைச்சினது கேள்வி நேரத்தின் போது இவ் விடயம் குறித்த கேள்விகள் கேட்கப்படலாம் எனப் பிரித்தானிய நாடாளுமன்ற சபாநாயகர் ஜோர்ஜ் யங் தெரிவித்துள்ளார்.

இந் நிலையில் இது வொரு தனிப்பட்ட சந்திப்பு என்பதால் இச் சந்திப்புத் தொடர்பான விபரங்களை தன்னால் வெளியிட முடியாது என லியாம் பொக்ஸ் கூறியிருக்கிறார். (ச-5)

## ஆசிய அபிவிருத்தி...

இலங்கையில் இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு போரினால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கின் அபிவிருத்தி முக்கியமானது என அரசாங்கம் தெரிவிப்பதாக இது குறித்து ஆசிய அபிவிருத்தி வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வடிப்படையில் இலங்கை அரசாங்கத்தினால் வட பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறப்படுகின்ற அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாடுகளுக்காக இக்கடன் வழங்கப்படுவதாக ஆசிய அபிவிருத்தி வங்கி குறிப்பிட்டுள்ளது.

வட பகுதியில் நீர்வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாடுகளுக்காக மேற்கொள்ளப்படவுள்ள பணிகள் 2017ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் பூர்த்தியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## கேரளாவில் மீள...

கூட்டத்தைத் தொடர்ந்து இந்தத் திரைப்படம் காட்சிப்படுத்தப்பட்டதாக மலையாளப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தசம்பவத்தின்பின்னர் கேரளாவில் இடம்பெற்ற பொலிஸார் ஊடகச் சந்திப்புக்களின் போதும் ஊடகவியலாளர்கள் இது தொடர்பில் பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளனர்.

எனினும் மலையாள சிரேஷ்ட ஊடாகவியலாளர் எம்.ஜி.இராதாகிருஷ்ணன் இந்த ஆவணப்படம் திரையிடப்பட்டமை தொடர்பில் ஆச்சரியம்கொள்ளத்தேவையில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் இவ்வாறான திரைப்படம் ஒன்று உண்மையில் திரையிடப்பட்டதா? எனவும் அவ்வாறு திரையிடப்பட்டிருந்தால் அதில் கலந்துகொண்டவர்கள் தொடர்பிலான தகவல்கள் குறித்தும் விசாரணை நடத்தி வருவதாக பொலிஸ் ஆணையாளர் அஜித்குமார் தெரிவித்துள்ளார்.

எனினும் நாட்டின் இறைமையை பாதிக்காத எந்தவொரு திரைப்படத்தையும் திரையிட தடையேற்படுத்தப் போவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## பிரி.தூதரகத்துக்கு முன்னால்...

என்ற ரீதியில் அவருக்கு உரிய பாதுகாப்பை பிரித்தானிய அரசாங்கம் வழங்கவில்லை எனக் குற்றஞ்சாட்டியே இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

ஒக்ஸ்போர்ட் ஒன்றியத்தில் நேற்று முன்தினம் நடைபெறவிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் விஷேட உரை தமிழ் மக்களின் தீவிர போராட்டங்கள் காரணமாக இரத்துசெய்யப்பட்டிருந்தது.

இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக பிரித்தானிய தூதரகம் நேற்று மூடப்பட்டிருந்தது. அத்துடன் பிரித்தானியாவுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தூதரக வளாகத்திற்குள் செல்ல பொலிஸார் அனுமதிக்கவில்லை.

இந்த ஆர்ப்பாட்டத்தில் உரையாற்றிய அமைச்சர் விமல் வீரவன்ச ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு பாதுகாப்பை வழங்காத பிரித்தானிய அரசாங்கம்மீது விசனம்தெரிவித்தார்.

அத்துடன் இலங்கையில் கால்பதிக்க வேண் டும் என பிரித்தானியா முயற்சித்து வருவதாக விமல் குற்றம் சுமத்தினார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு பாதுகாப்பை வழங்க முடியாது போனமைக்காக பிரித்தானியாவை வீழ்ச்சியடைந்த ஒரு நாடாகவே கருத வேண்டும் என அவர் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பிரித்தானியாவில் தடை செய்யப்பட்ட இயக்கம் என்றால் விடுதலைப் புலிகளின் கொடிகளை ஏந்தி ஆர்ப்பாட்டம் நடத்த எவ்வாறு பிரித் தானிய அரசாங்கம் அனுமதிக்க முடியும் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (ச-5)



### "நாட்டிய மயில் - 2010"

Eu Lanka Forum நிறுவனத்தினால் எதிர்வரும் 11-ம் திகதி (11.12.2010), சனிக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ்/ இந்து மகளிர் கல்லூரி கலையரங்கில் நடாத்தப்படவுள்ள நாட்டிய மயில் நிகழ்வில் அகில இலங்கை ரீதியில் போட்டியிடும் நாட்டியத் தாரகைகளில் ஒருவர் நாட்டிய மயிலாக தெரிவு செய்யப்படவுள்ளார்.

இந்நிகழ்வை கண்டுகளிக்க அகில இலங்கை ரீதியில் பல முக்கியமான கலைஞர்கள், கல்விமான்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் அதிதிகளாக கலந்து கொண்டு சிறப்பிக்க இருப்பதால் இந்நிகழ்வை நேரில் கண்டுகளிக்க விரும்புவோர் 08.12.2010ற்கு முன்னராக எமது Eu Lanka Forum நிறுவனத்தின் தொலைபேசிகளினூடாக ஆசனப் பதிவுகளினைப் உறுதிப்படுத்துமாறு அன்புடன் அறியத்தருகின்றோம்.

**பிரவேசம் இலவசம்!**

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்:
021 7200157
021 2227542

நிர்வாகம்
Eu Lanka Forum



(C-1729)

## ஜனாதி...

உறுப்பினர் ஜோன் றையன் அம்மையார் ஆகியோர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாக தெரியவருகின்றது.

முதன்மை குற்றவாளியாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் அவருடன் லண்டன் சென்ற அவரது பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பதிகாரியான மேஜர் ஜெனரல் சஜிகலேகே உட்பட பலருக்கு எதிராக இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. (எ-1)

## யுத்தக்...

நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தனிப்பட்ட நபர்களின் உயிருக்கும் இந்த தகவல்கள் ஆபத்தை ஏற்படுத்தியுள்ளது. விக்கிலீக்ஸின் நடவடிக்கைகள் பொறுப்புணர்ச்சியற்ற நாசவேலையாக கருதப்பட வேண்டும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உண்மையை கண்டறியும் ஆணைக் குழு நியமித்தமை வரவேற்கத்தக்க விடயமாகும். தமிழ் மற்றும் சிறுபான்மை மக்களின் கருத்துக்களுக்கும் முக்கியத்துவம் அளித்து உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவும் அரசாங்கத்தின் முகவர் நிறுவனமும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியது மிகவும் அவசியமானதென அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-5)

## சிப்பாய் சூட்டதில்...

இராணுவச் சிப்பாய் பிரஸ்தாப இளைஞனை தடுத்துள்ளார்.

அப்போது சிப்பாய் மீது அவ் இளைஞன் தாக்கியுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த மற்றொரு சிப்பாய் இளைஞன் மீது துப்பாக் கியால் சுட்டுள்ளார். அப்போது இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் மீசாலையைச் சேர்ந்த துரைரட்ணம் துஸ்யந்தன் (வயது 25) எனத் தெரிவிக்கப்பட்டது.

உடனடியாக சம்பவ இடத்துக்கு சென்ற படையினர் தமது வாகனத்தில் சடலத்தை எடுத்துச் சென்று வைத்தியசாலையில் ஒப்படைத்ததாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். (ச-8,5)

## ஜனாதிபதி...

பம் கிடைக்கவில்லை.

இதனையடுத்து பிரித்தானியா அரசியல் தலைவர்களை அவர் சந்திக்க முயன்ற போதும் அதுவும் புலம்பெயர்ந்ததமிழர்களின் போராட்டத்தினால் சாத்தியமாகவில்லை என செய்திகள் தெரிவிக்கின்றன. (எ-1)


**Uduvil Girls' College**

*invites*

Parents past pupils and wellwishes to its *Prize Day* on

**Saturday, December 04, 2010, 1.30 p.m.**

*Chief Guest :SelvyThiruchandran Ph.D,*
Director ,Women's Education
& Research Centre, Colombo
Faculty, Graduate Studies,
University of Colombo.

(C-1727)

Principal ,Staff & Students


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.12.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org